www.padippakam.com

# புதிய கலாச்சாரம்



## கார்கில்

## இந்நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குவோர்

பெப்ஸி, கோக், விமல், பஜாஜ், ஹட்சின்சன் டெலிகாம்,

பேக்மென், தேவு, அய்வா, ஸ்டார் டி.வி. நெட்வொர்க்.

www.padippakam.com

நூல் அறிமுகம்

# காம்ரேட்

பெற்ற பிள்ளையை வளர்க்க ஒரு தாய் படும் துன்பத்தையும், மகளை மணம் செய்து கொடுக்க ஒரு தந்தை படும் துன்பத்தையும் உலகின் மாபெரும் துன்பங்களாகவும், தியாகங்களாகவும் பதிவு செய்கின்றன இலக்கியங்கள். ஆனால் ஏற்றத் தாழ்வுகளற்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க பல வகையான துன்பங்களையும் கடந்த மனிதர்களை நீங்கள் பார்த்ததுண்டா?

அப்படிப் பார்க்காதவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பை வழங்குகிறது ''காம்ரேட்'' எனும் நூல். பகத்சிங்சின் நண்பரான யஷ்பால் அவர்கள் எழுதியிருக்கும் இவ்வரலாற்றுப் புதினத்தில் தன் னலத்தைத் தூர எறிந்துவிட்டு சமுதாய நலனுக்காக தம்மை முழுவதுமாக ஒப்படைத்த நமது முன்னோர்களைப் பார்க்க முடிகிறது.

இந்தப் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை வேறு எந்தப் பெண்ணுக்கும் நேரக்கூடாது என்று நல்லதங்காள் கதையைக் கேட்டு மூக்கைச் சிந்துபவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மைக்கு எதிராக கீதா (கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்) சந்தித்தக் கொடுமைகள், எதிர்கொண்ட அவமானங்களை இப்புதினத்தில் பார்க்கும் யாரும் இன்றளவும் நீடிக்கின்ற இந்தப் பிற்போக்குச் சமுதாயத்தின் மீது கோபம் கொள்ளாமல் இருக்கமுடியாது.

நடைபாதையில் நின்று, போவோர் வருவோரிடம் கட்சிப் பத்திரிகை விற்றுக் கொண்டிருக்கிறாள் கீதா. காங்கிரஸ்காரனான ரவுடி பவாரியாவின் கண்கள் அவளுடைய மேனியை மேய்கின்றன. அவனுடன் நிற்கும் சுகில், பவரியாவைக் கிள்ளியபடியே கேட்கிறான். ''முதலாளி! உருப்படி எப்படி?'' இத்தகைய அருவெறுப்பான பார்வைகளைக் கீதா எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கல்லூரி ஆராய்ச்சி மாணவியான கீதா கம்யூனிஸ்ட் கட்சி ஊழியராகப் பரிணமிக்கும் போது இந்தப் புதியதொடர்பு (கம்யூனிஸ்ட் கட்சி) அவளுக்குப் பல விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலைத் தூண்டியது... அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சி நல்ல உடைகளையும், நகைகளையும் அணிவதைவிட மேலானது என்பதை அவள் உணர்ந்தாள்.'' (பக்.13). இப்படிப் பிற்போக்குத் தனங்களை உதறியவுடன் இலக்கில்லாமல் எதையும் எதிர்ப்பது என்று ''வாய்ப்புரட்சிக்கு'' வம்பளக்க ஒதுங்கவில்லை. புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க உள்ள தடைகளைத் தகர்ப்பதற்கு எதையெல்லாம் பற்றியொழுகலாமோ அதுவே அவளுக்கும் ஒழுக்கமானது.

ஒழுக்கம் நாகரிகம் பற்றிய பொது வரையறையை கம்யூனிஸ்டுகள் ஏற்பதில்லை. அது வர்க்கத்திற்கு ஏற்றாற் போல வரையறுக்கப்படுகிறது என்பதை வாழ்க்கையிலிருந்து எடுத்துக் காட்டுகிறது ஒரு பகுதி:

''... எண்ணற்ற தெருக்கூட்டும் தொழிலாளி சகோதரிகளும், பூர்வகுடிப் பெண்களும் முழங்கால்கூட மறையாத ஆடைகளுடன் மார்பு தெரிய குப்பை கூட்டுகின்றனர். யாருக்கும் அதைப் பற்றிக் கவலையில்லை. வெட்கித்தலை குனியவில்லை. ஒரு பூர்ஷ்வா, ஏன் படித்த வர்க்கத்து சின்ன எஜமானிகளின் சேலை அரைசாண் உயர்ந்துவிட்டால் பம்பாய் நகரம் பற்றி எரிகிறது....'' (பக்.21).

இப்படி கீதாவை முன்வைத்து கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்பாடு, போராட்டங்களைச் சொல்வதுடன் - பவாரியா என்ற காங்கிரஸ் அனுதாபியும், ஏரியா தாதாவுமான ஒரு ரெளடியை கம்யூனிஸ்ட் கட்சி - குறிப்பாக கீதா எவ்வாறு அரசியல் படுத்துகிறார் என்பதும், பவாரியாவின் சொந்த அனுபங்களின் மூலமாகவே காங்கிரஸின் ஏகாதிபத்திய சேவையை அம்பலப்படுத்துவதும் சிறப்பாகப் புதினத்தில் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன.




முத்தாய்ப்பாக கப்பற்படை எழுச்சியை கம்யூனிஸ்டுகள் ஆதரித்துப் போராடும்போது, 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று புகழப்படும் சர்தார் பட்டேலின் வேண்டுகோள் இது, ''மக்கள் இந்த நெருக்கடியான நிலைமையில் வேலை நிறுத்தம் போன்ற எதிலும் கலந்துகொள்ளாமல் அடக்கமாக இருக்க வேண்டும்.... மக்கள் எந்தவிதமான உதவியோ ஆதரவோ காட்டக்கூடாது'' என்று எச்சரித்தார். (பக்.80).

வரலாற்று வழியில் காங்கிரஸ் இவ்வளவு அம்பலப்பட்ட பிறகும் அன்றைக்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை காங்கிரசை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதில் அதன் செயல்பாடுகளை ஏகாதிபத்திய சதி என்று கருதி தவறிழைத்ததையும் பலகாட்சிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இன்றைய கம்யூனிஸ்டு கட்சியின் (மார்க்சிஸ்டு) பத்திரிகையான தீக்கதிரின் பொறுப்பாசிரியர் சு.பொ. அகத்தியலிங்கம் இந்நூலுக்கு எழுதியிருக்கும் முன்னுரையை வாசகர்கள் பின்னுரையாகப் படிப்பது நல்லது.

அன்று காங்கிரசின் அவதூறுகளுக்கு இரையான கம்யூனிஸ்டுகளின் அனுபவத்தைக் காட்டி, ''இப்போது இந்துமதவெறி பாசிச சக்திகளை உறுதியோடு எதிர்த்து நிற்பதால் இத்தகைய அவதூறு பிரச்சாரத்துக்கு கம்யூனிஸ்டுகள் ஆளாக்கப்படுகிறார்கள் அல்லவா? '' என்று தங்களுடன் முடிச்சுப் போடுகிறார்.

கப்பற்படை எழுச்சிக்குத் தோள் கொடுத்த தோழர்கள், இன்று காங்கிரசு எழுச்சிக்குத் தோள் கொடுக்கும் மார்க்சிஸ்டுகளுக்கு முன்னோடிகளா?

இந்த முன்னுரையின் தலைப்பு ''காம்ரேட் கீதாவுடன் ஒருமுறை கை குலுக்குங்கள்.'' ஆனால் கார்ஜித்தும் பாசுவும் அன்னை சோனியாவுடன் அல்லவா கை குலுக்கச் சொல்கிறார்கள்!

— சித்தன்.

பி.கு: நூலைப் படித்துப் பார்த்துத்தான் இந்த முகப்பு அட்டையைப் பதிப்பகத்தார் தெரிவு செய்தனரா என்ற ஐயம் அட்டையைக் காணும்போது ஏற்படுகிறது.

நூல் விலை: ரூ. 20.00
வெளியீடு : அலைகள் வெளியீட்டகம்
சென்னை - 24.
நூல் கிடைக்குமிடம் :
கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லிசு சாலை,
சென்னை - 600 002.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 1-3
• ஆகஸ்டு '99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# உலகக் கோப்பை - கார்கில் கோப்பை!

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அரை இறுதிச் சுற்றுக்கே வரமுடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த இந்திய அணி, பாகிஸ்தான் அணியை வென்றவுடனே இந்திய அணியின் மேலாளர், ''இனி எங்களது எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும்'' என்று கூறி நிம்மதிப் பெருமூச்சு விட்டார். ''இறுதிச் சுற்றில் யார் வெல்ல வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?'' எனக் கேட்டபோது தொலைக்காட்சிப் பேட்டியில் ஒரு மாணவர் சொன்னார்: ''ஒரு உண்மையான இந்தியன் என்ற முறையில் ஆஸ்திரேலியா வெல்ல வேண்டுமென விரும்புகிறேன்.''

உலகக் கோப்பை போட்டி நடைபெறும் போதே கார்கில் மோதலும் துவங்கிவிட்டது. இந்தியா அரையிறுதியில் நுழைய முடியாது என்பது உறுதியாகிப் போன நிலையில், இந்து தேசியத்தின் பரம்பரை தருமகர்த்தாவான பஜாஜ் நிறுவனம் ஒரு தொலைக்காட்சி விளம்பரத்தை வெளியிட்டது. பற்றியெரியும் பந்துகள், ஸ்டம்புகள், தீப்பிழம்பாகிப் போன கிரிக்கெட் ஆட்டக்களம், சோளக் கொல்லைப் பொம்மைகளாகத் தீயில் கருகும் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள், அதன்மீது குருச்சேத்திரத்தின் கீதோபதேசக் காட்சி; இந்தக் காட்சிப் படிமங்களின்மீது நகரும் துன்பம், வலி, அவமானம், கோபம் என்ற சொற்கள். அதனைத் தொடர்ந்து இறுதியாக ''நாம் வென்றே தீருவோம்'' என்ற வாசகம்.

திறமை இல்லையென்றாலும் இந்திய அணி வெல்ல வேண்டும் என்று விரும்புபவனே தேசபக்தன்; நியாயம் இல்லையென்றாலும் கார்கில் போரை ஆதரிப்பதே தேசபக்தி. யாருக்காக உயிரைக் கொடுக்கிறேன் என்று கேட்கும் சிப்பாயும், எதற்காகப் போரிடுகிறோம் என்று கேட்கும் குடிமகனும் தேசவிரோதிகள். தேசபக்தியின் புதிய வரைவிலக்கணம் இது. சிவனடியார்க்குப் பிள்ளைக்கறி படைத்த சிறுத் தொண்டனின் தெய்வ பக்திக்கு இணையான தேசபக்தியைக் கோருகிறது பாரதீய ஜனதா. ''தேசபக்தியா, ஊற்று இன்னும் நூறு மில்லி'' என்று போதையேற்றுவதில் போட்டி போடுகின்றன எதிர்க்கட்சிகள்.

இதுவரை மூன்று இந்தியா-பாக் போர்கள் நடந்துள்ளன. 1984 முதல் 15 ஆண்டுகளாக சியாச்சின் பனிப்பாறைகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் அறிவிக்கப்படாத போரின் ஒரு நாள் செலவு 4 கோடி. தற்போதைய போரின் இதுவரையிலான செலவு 10,000 கோடிக்கு மேல். கல்விக்கும், மருத்துவத்திற்கும், விவசாயத்திற்கும் நிதி ஒதுக்க முடியாத அரசு பீரங்கிக்கும், வெடி மருந்துக்கும் வாரியிறைக்கிறது. எதனைப் பாதுகாப்பதற்கு இந்தப் பாதுகாப்புச் செலவு? காஷ்மீரைப் பாதுகாக்க. காஷ்மீரைப் பாகிஸ்தானிடமிருந்து பாதுகாக்க எல்லையில் இராணுவம்; காஷ்மீரை காஷ்மீர் மக்களிடமிருந்து பாதுகாக்க காஷ்மீருக்குள்ளேயும் இராணுவம். காஷ்மீரைக் காஷ்மீர் மக்களே பாதுகாத்துக் கொள்ளும்படி விட்டு விடுவதில் என்ன பிரச்சினை? அதுதான் காஷ்மீர் பிரச்சினை; அதுதான் இன்றைய கார்கில் யுத்தம்.

தங்களுக்கு எந்த விதத்திலும் உரிமையில்லாத பிரதேசத்தின் மீது இந்தியாவும் பாகிஸ்தானும் நடத்தி வரும் போர் இது. காஷ்மீரின் 90 சதவீத மக்கள் முஸ்லீம்களாக இருந்தபோதிலும் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது அவர்கள் பாகிஸ்தானுடன் இணையவில்லை. பாகிஸ்தான் ஆக்கிரமித்தபோது அதை எதிர்த்தனர்; ''காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தி, பெரும்பான்மை மக்கள் விரும்பினால் காஷ்மீர் தனிநாடாகப் போவதை ஏற்கிறோம்'' என்று நேருவும், காந்தியும், இந்திய அரசு ஐ.நா.விலும் உறுதிமொழி கொடுத்து ''பாகிஸ்தானிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறாம்'' என்று சொல்லி காஷ்மீரை இந்தியாவுடன் தற்காலிகமாக இணைத்தனர். அதன் பிறகு இந்த வாக்குறுதியை இந்திய அரசு பகிரங்கமாக மீறியது. பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதி பாக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் என்றும், இந்தியா ஆக்கிரமித்த பகுதி இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் என்றும் இப்போது அழைக்கப்படுகிறது. அதனால்தான் காஷ்மீர் பகுதியில் உள்ள கோடு 'எல்லைக்கோடு' என்று அழைக்கப்படாமல் 'கட்டுப்பாட்டுக்கோடு' என்று அழைக்கப்படுகிறது. இவையனைத்தும் விவாதத்திற்கு அப்பாற்பட்ட, யாரும் மறுக்கவியலாத வரலாற்று உண்மைதான்.

காஷ்மீர் மக்களின் தன்னுரிமைக்கான போராட்டத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள பாக் அரசு முனைகிறது. ஈழத்தில் இந்திய அரசு தனது ''கைக்கூலிப் போராளி''களை உருவாக்கியது போல, காஷ்மீரில் இசுலாமிய மத அடிப்படைவாதக் குழுக்களை உருவாக்கி, ஆயுதம் தந்து அனுப்புகிறது. போரில் வென்று காஷ்மீரை இந்தியாவிடமிருந்து கைப்பற்ற முடியாது என்பதால் இசுலாமிய மக்களை விடுதலை செய்வது என்ற போர்வையில் இதைச் செய்கிறது. இந்திய இராணுவ அடக்குமுறையால் வெறுப்புற்ற காஷ்மீர் மக்கள் தம் பக்கம் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் ஐ.நா. தலையிட வேண்டும் என்றும் வாக்கெடுப்பு நடத்த

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

வேண்டும் என்றும் கோருகிறது. அதே நேரத்தில் ''இந்தியா - பாக் இரண்டும் வேண்டாம், தனியாகப் போகிறோம்'' என்று கூறும் மதச்சார்பற்ற காஷ்மீர் போராளிகளைத் தனது கைக்கூலிப் படைகள் மூலம் பாகிஸ்தான் இராணுவம் கொன்றொழித்தும் இருக்கிறது.

''காஷ்மீரில் பாகிஸ்தான் செய்வதைப் போலவே நாமும் அந்நாட்டின் சிந்து, பலூசிஸ்தான் மாகாணங்களில் பிரிவினைவாதத்தைத் தூண்டிவிட வேண்டும்; கார்கிலைத் திரும்பப் பிடிப்பதுடன் போரை நிறுத்தக் கூடாது, முழு காஷ்மீரையும் கைப்பற்ற வேண்டும்; ஒரு ஆயுதப் போட்டியில் இழுத்துவிட்டு பாகிஸ்தானின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டும். என்று வெறிக் கூச்சல் எழுப்புகிறார் பா.ஜ.க.வின் ஊதுகுழலான அருண் சோரி. பாகிஸ்தானிலுள்ள இசுலாமிய மதவெறியர்களும், இங்கே இந்து மத வெறி ஆர்.எஸ்.எஸ்.ஸும் அணுகுண்டைப் பயன்படுத்துவோம் என்று ஆர்ப்பரிக்கின்றன.

நாடே அழிந்தாலும் சரி, காஷ்மீர் மக்களின் ஜனநாயக உரிமையை ஏற்கக் கூடாது என்பதுதான் இந்தக் கூச்சல்களின் பொருள். ஒரு இடைத் தேர்தலில் ஆளும் கட்சி தோற்றுவிட்டால் உடனே மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று பேசும் ஓட்டுக்கட்சிகள் காஷ்மீர் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மட்டும் மறுப்பது ஏன்? இது மோசடியல்லவா? 'கிரிக்கெட் - கார்கில் தேசபக்தி'யால் பாதிக்கப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

அப்படிக் கட்டாயமாகக் காஷ்மீரைத் துப்பாக்கி முனையில் பிடித்து இருத்துவதால் ஆதாயம் அடைவது யார்? போர்முனையில் உயிர் விடும் சாதாரண இராணுவச் சிப்பாய்களா, ஒரு நாள் சம்பளத்தைத் தரும் தொழிலாளிகளா, ரத்த தானம் கொடுக்கும் மாணவர்களா? காஷ்மீரில் சுற்றுலா என்ற பெயரில் கோடிக் கணக்கில் சம்பாதிப்பவர்கள் தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும்தான். பாகிஸ்தானின் ஆளும் வர்க்கங்கள் காஷ்மீருக்கு ஏங்குவதும் இதற்காகத்தான். இதனை மறைக்கின்ற மாய்மாலம்தான் தேசபக்திப் பேச்சு.

இசுலாமியக் குடியரசான பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் செரீப் யுத்தம் தொடங்கியவுடனே மெக்காவுக்குப் போகவில்லை; வாஷிங்டனுக்குச் சென்றார் - கிளிண்டனைத் தரிசிக்க. இந்துத்துவ வாஜ்பாயியின் தூதரும் அயோத்தி சென்று ராமனிடம் ஆசி பெறவில்லை; அமெரிக்காவுக்குத்தான் ஓடினார். இது இரண்டு அமெரிக்க அடிமைகள் நடத்திக் கொண்டிருக்கும் தேசபக்தி நாடகம். மறுகாலனியாதிக்கக் கொள்கையின் கீழ் நாட்டின் விவசாயம், தொழில், கனிவளங்கள் அனைத்தையும் அந்நிய, பன்னாட்டு கம்பெனிகளுக்கு விற்பனை செய்துவிட்டு கார்கிலில் 18,000 அடி உயரத்தில் தேசபக்தியை நிலை நாட்டுவதாகப் பேசுவது பம்மாத்து.

''இனி எங்களது பாவங்கள் மன்னிக்கப்படும்'' என்று பாகிஸ்தானை வெற்றி கொண்ட இந்திய கிரிக்கெட் அணியின் மேலாளர் கூறியதைப் போல, ஆலை மூடல், ஆட்குறைப்பு, விலை உயர்வு, விவசாயிகள் தற்கொலை, ஆகிய தனது ஆட்சியின் அனைத்து 'பாவங்களையும்' கார்கில் பீரங்கிச் சத்தத்தில் அமுக்கப் பார்க்கிறது பா. ஜனதா. இந்துத்துவ போதையில் மூழ்க மறுத்த மக்களை தேச 'பக்தி' போதையில் ஆழ்த்தப் பார்க்கிறது. இந்த மோசடி தேசபக்தியிலிருந்து மக்களை மீட்பது உண்மையான நாட்டுப் பற்றுள்ள ஒவ்வொருவரின் கடமை.

●

# சற்றே சந்தேகிப்பீர்!

பனி மலைகளைக்
கைப்பற்றிவிட்டனவாம்
இராணுவக் கம்பெனிகள்
நமது பனிமனைகளை
கைப்பற்றிவிட்டன
அந்நியக் கம்பெனிகள்!

சந்தேகம் வருகிறது
சண்டை எல்லையில் மட்டுமா?
ஒன்றுக்கும் உதவாத இடமாயினும்
ஒரு அங்குலம் கூட விடமாட்டோமென
குறிபார்த்து வீசப்படுகின்றன குண்டுகள்
ஆனால்,
விதைகளை வீசி
தமது நிலங்களை பிடித்துவிட்ட
'டெர்மினேட்டர்' படைகள் மீது மட்டும்
தேசபக்தி ஆயுதங்கள்
திரும்ப மறுக்கின்றன.

சந்தேகம் சரிதான்
ஐ.எஸ்.ஐ.க்குச் சவக்குழி
ஐ.எம்.எப்.க்குப் பதுங்கு குழி.
ஊடுருவல்காரர்கள் நுழைந்து நாளாயிற்றாம்.
உண்மைதான்
வயலில் உரமாய்க் கலந்து
அன்னையின் கருவிலும்
அந்நியர் ஆக்கிரமிப்பு.
கைத்தொழில், நெசவு, வேளாண்மை
மூன்று முக்கிய மலைகளையும்
கைப்பற்றிவிட்டார்கள்
கோலா, பெப்சி இன்னும்
குளிரூட்டப்பட்ட ஆயுதங்களால்
குலைத்து விடுகிறார்கள் கோபத்தை.
ஒட்டிய நம் வயிற்றுப் பள்ளத்தாக்குகளை
ஊடுருவியுள்ள தீவிரவாதிகளின் முகாம்கள்
தெளிவாகத் தெரிகின்றன
அரசினர் தோட்டங்களில்.

சந்தேகம் வலுக்கிறது
பாராளுமன்றத்தில் பறப்பது
கூலிப்படையின் கொடியா?
வட்டிக்கடைக்காரன் தாக்குதலறிந்து
பதுங்கு குழிகள் தேடும் விவசாயிகள்
அடுத்தவேளைச் சோற்றுக்காய்
அடிக்கடி முகாம்களை மாற்றும்
தொழிலாளிகள்
மலைமுகடுகளில் சண்டையிடும்
இராணுவச்சாகசங்களை விஞ்சுகின்றன
பள்ளத்தாக்கில் கிடக்கும் பலாது வாழ்க்கை.

சந்தேகமே இல்லை
யுத்தம் எல்லைக்கு உள்ளே
நடத்தப்பட வேண்டும்.

● துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

# தேசபக்தீ

கொழுந்துவிட்டு எரிகிறது
தேசபக்தீ.

இந்தத் தீயில்
தப்பமுடியாமல் சிக்கிய
ஜீவன்கள் - சிப்பாய்கள்.

விட்டில் பூச்சிகள்
விவரமறியா மக்கள்.

குளிர்காய்பவர்கள்
தொழில்முறை தேசபக்தர்கள்.

லாகூர் பயணத்தில்
பஞ்சாப் முதல்வர் பாதலுக்கு
ஆறு ஆட்டுக்கிடாக்களைப்
பரிசளித்தாராம் நவாஸ் செரீப்
''பாகிஸ்தானி ஆடு
பஞ்சாபில் ஊடுருவுவதா
ஓட்டிவிடு உடனே'' - என்று
கர்ச்சிக்கிறார்
பஞ்சாப் காங்கிரஸ் தலைவர்.

ஆடுகள் பாதலின்
வயிற்றை ஊடுருவிட்டன.
எல்லைக்கப்பால்
எலும்பை வீசுவதா
தின்றவன் என்ற முறையில்
தானே ஓடிவிடுவதா?
தேசத்துரோகம் - பாதலின்
வயிற்றைக் கலக்குகிறது.

தேசத்துக்காக நடிகர்கள்
மதுரையில்
ரிகார்டு டான்ஸ் ஆடுகிறார்கள்.
தேசபக்தி விசில் சத்தம்
தமிழகமெங்கும் எதிரொலிக்கிறது.

''வரிபாக்கியைக் கட்டு
பிறகு தேசபக்தியைக் காட்டு''
என்று
ரிகார்டு டான்ஸில் குறுக்கிட்ட
'தேசத்துரோகிகள்'
கைது செய்யப்படுகிறார்கள்.

காசு போடுவதற்காகக்கூட
உண்டியலைத் தொட்டறியாத
கபிஸ்தலம் பண்ணையார்
உண்டியலேந்தி
தி.நகர் தெருக்களில் அலைகிறார்.

உண்டியலின் ஓட்டைக்குள்
ஐநூறு ரூபாய்க் கட்டைத்
திணிக்க முடியாமல்
தவிக்கிறார்கள்

வட்டிக்கடை, நகைக்கடை
தேசபக்தர்கள்.

மொய் செய்ததில்
இந்தியாவிலேயே
தமிழகத்துக்குத்தான் முதலிடம்.

''தாய்த்திருநாடு தன்னைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா''

கும்பிட்ட பிறகு
காணிக்கை செலுத்துகிறார்கள்
பக்தர்கள்

பக்தர்களில்
மானமிகு, வீரமணியும்
மானமிகு, ஆனைமுத்துவும்
அடக்கம்.
இப்போது இந்திய மானம்
அவ்வப்போது தமிழ்மானம்.

தேசத்தை மொட்டையடித்த
காங்கிரஸ்காரர்கள்
இப்போது தேசத்துக்காக
மொட்டையடிக்கச்
சொல்கிறார்கள்.

தீ பரவுகிறது...

''சென்னை
பத்மா சேஷாத்திரி பள்ளி
மாணவர்கள்
இரண்டரை லட்சம் நன்கொடை''
பூரிக்கிறது தினமணி.

''எங்கள் மாணவர்களெல்லாம்
அமெரிக்காவில்
இருக்கிறார்கள்''
பூரிக்கிறார்
அந்தப் பள்ளி முதல்வர்.

பத்மா சேஷாத்ரிகள்
அமெரிக்காவுக்குப் பறக்கின்றன.

நகராட்சி பள்ளி
பஞ்சாயத்து பள்ளிகள்
கார்கிலில் விரைக்கின்றன.

வந்தே மாதரம்!
அவர்கள் கார்கிலுக்கு
நிதி தருவார்கள்.
கொசாவாவில் குண்டுபோட
நாசா (NASA)விற்கும்
புரோகிராம் எழுதித் தருவார்கள்.

''சிப்பாய்கள்
நள்ளிரவில் நடுங்கும் குளிரில்
18,000 அடி உயரத்தில்
கண்விழித்து நிற்காவிட்டால்
நாம் உறங்கமுடியுமா?''

மொய் எழுதும் கனவான்கள்
தேசபக்திக்குத் தரும்
புது விளக்கம் இது.

அவர்கள்
நள்ளிரவில் நிற்பதும்
நடுங்கும் குளிரில் நிற்பதும்
உண்மை.
உயரத்தில்தான்
கொஞ்சம் வித்தியாசம்.

18000 அடி உயரத்திலல்ல
அவர்கள்
உங்கள் பங்களா வாசலில்
நிற்கிறார்கள்.
அவர்கள்
முன்னாள் இராணுவத்தினர்.
நேற்று
நாட்டு எல்லைக்குக் காவல்.
இன்று
உங்கள் வீட்டு எல்லைக்குக் காவல்.

இரண்டும் ஒன்றுதான்
என்ற ரகசியம்
அந்த ஏமாளிகளுக்குப்

தேசபக்தி - அது உயிரைக்
கொடுப்பதால்
தீர்மானிக்கப்படுவதில்லை.
உயிரைக் கொடுக்கும்
நோக்கத்தால்
தீர்மானிக்கப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

புரியும் வரை
நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்.

மரணத்தை எதிர்நோக்கிப்
பதுங்குகுழியில் காத்திருக்கும்
பரிதாபத்துக்குரிய சிப்பாயின்
பையில் இருப்பது
பாரதமாதாவின் படமா
பெண்டாட்டியின் புகைப்படமா?

கார்கிலில் இறந்த
ஒரு பாகிஸ்தான் சிப்பாயின்
சட்டைப்பையில்
அவன் மனைவிக்கு எழுதிய
கடிதமிருந்ததாம்.

''நம் பிள்ளைகளை
இராணுவத்திற்கு மட்டும்
அனுப்பிவிடாதே'' - என்று
எழுதியிருந்தானாம்.

அமைதிப்படைச் சிப்பாயின் பையில்
என்ன இருந்திருக்கும்?

இராணுவ ஆளெடுப்புக்கு
'தேசபக்தர்கள் தேவை'
என்று விளம்பரம் செய்வதில்லை.
எடை மிசினும் இஞ்ச் டேப்பும்
தேசபக்தியை அளக்கும்
கருவிகளுமில்லை.

உழைப்பைக் கொடுத்து
வயிற்றை நிரப்பும்
வேலை கிடைக்காததால்
உயிரைக் கொடுத்து
வயிற்றை நிரப்பவந்த
பாவப்பட்ட ஜென்மங்கள்
சிப்பாய்கள்.

வியத்நாமுக்குப் போன
அமெரிக்கச் சிப்பாயும்
ஆப்கானுக்குப் போன
ரசியச் சிப்பாயும்
ஈழத்துக்குப் போன
இந்தியச் சிப்பாயும்
தேசபக்தர்களா?

தேசபக்தி - அது
உயிரைக் கொடுப்பதால்
தீர்மானிக்கப்படுவதில்லை.
உயிரைக் கொடுக்கும்
நோக்கத்தால்
தீர்மானிக்கப்படுகிறது.

●●

**மரணத்தை
எதிர்நோக்கிப்
பதுங்குக் குழியில்
காத்திருக்கும்
பரிதாபத்துக்குரிய
சிப்பாயின் பையில் இருப்பது
பாதரமாதாவின் படமா
பெண்டாட்டியின் புகைப்படமா?**

''பேசுங்கள்...
கார்கிலில் மடிந்த உயிர்களுக்காகப்
பேசுங்கள்'' - என்று
மன்றாடுகிறது
ஹட்சின்சன் டெலிகாம் என்ற
பன்னாட்டு நிறுவனம்.

நீங்கள் பேசத்துவங்கியவுடனே
''இதோ
எங்கள் செல்போனில் பேசுங்கள்
மனைவியோடு, காதலியோடு..
யாரோடாவது பேசுங்கள்
மணிக்கணக்கில் பேசுங்கள்
பேசும் ஒவ்வொரு நிமிடமும்
எங்களுக்கு 7 ரூபாய்
கார்கிலுக்கு ஒரு ரூபாய்''
என்கிறது அந்நிறுவனம்.



தில்லியில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர், கார்கிலுக்காக போடும் மொட்டை

இந்துத்துவ சுதேசிகளால்
ஜப்பானிய சுசுகிக்குக்
கூட்டிக் கொடுக்கப்பட்ட
மாருதி
பழைய கற்பின் நினைவாகக்
காணிக்கை செலுத்தியது
50 லட்சம்.

கார்கிலுக்கு இரயிலேறும்
சிப்பாய்கள்
தாகத்துக்கு மொண்டு குடிக்க
டில்லி இரயில் நிலையத்தில்
பெப்சி பந்தல்.
யுத்தம் முடியும் வரை
இலவசம்.

என்ன விந்தை!
மூலதனத்துக்குத் தடையாக
தேசிய எல்லைகளா - என்று
கொதித்த
பன்னாட்டு நிறுவனங்கள்
இன்று எல்லைக்குக்
காணிக்கை செலுத்துகின்றன.

எசமானர்களே உருகும்போது
அடிமைகள்
சாமியாட வேண்டாமா?
''பாகிஸ்தானுடன் கிரிக்கெட்டா
பேசக்கூடாது''
என்கிறார் ஜடேஜா.

''சட்டையில் வில்ஸ் - தோள்
பட்டையில் பெப்சி
மட்டையில் எம்.ஆர்.எஃப்.
காலணியில் நைக்'' - என்று
எல்லா உறுப்புகளையும்
அந்நியக் கம்பெனிகளுக்கு
வாடகைக்கு விட்ட
இந்த தேசபக்தர்கள்
'ஜெய்ஹிந்த்' - என்று
எங்கே எழுதிவைத்திருந்தார்கள்
உள்ளாடையிலா?

''இராணுவ நிர்வாகத்தின்மீது
நம்பிக்கையில்லை
இறந்துபோன சிப்பாயின் குடும்பத்தை
நேரடியாகத்
தத்தெடுக்கப் போகிறோம்'' -
என்கிறார்
ஒரு பன்னாட்டு நிறுவன அதிகாரி.

குடும்பமென்ன,
பன்னாட்டு நிறுவனங்கள்


படிப்பகம்

www.padippakam.com

ஆளுக்கொரு படைப்பிரிவையே
தத்தெடுக்கலாம்.
புலிக்குன்றைக் கைப்பற்றிய
இந்திய சிப்பாய்
''ஏ தில் மாங்கே மோர்''
(இந்த இதயம் இன்னும் கேட்கிறதே)
என்கிற
பெப்சி விளம்பர வசனத்தையே
செய்தியாக அனுப்பினாராம்
இராணுவத் தலைமைக்கு.

இந்திய இராணுவத்தின்மீது
குண்டு வீசும்
பாகிஸ்தான் சிப்பாயும்
''டேஸ்ட் த் தண்டர்''
(இடியைச் சுவைபாருங்கள்)
என்ற
'தம்ஸ் அப்' விளம்பரத்தை
முழங்கக் கூடும்.

கட்டுப்பாட்டுக் கோட்டின்மீது
பெப்சியைக்
கடைபோட விடலாம்.
இரண்டு பக்கமும் விற்பதற்கு
வசதியாக.
கிளிண்டனின் தலையீட்டுக்குக்
கலாச்சாரக் குறியீடாக.

ஜிகாத் என்கிறது பாகிஸ்தான்
தேசபக்திப் போர்
என்கிறது பா.ஜ.க.
வானத்திலிருந்து சிரிக்கிறார்
முர்டோச்.

●●

புதுவரி போட வேண்டும் -
கார்கில் வரி!
தேர்தலுக்கு முன்னரா பின்னரா
என்பதில்தான்
வாஜ்பாயிக்குத் தடுமாற்றம்.

கார்கில் வரி
அசாம் வரி
மிசோரம் வரி
நாகாலாந்து வரி - என
நாலைந்து வரிகள் எதற்கு
ஒரே வரியில்
'ஒருமைப்பாட்டு வரி' - என்று
போடச் சொல்கிறார்கள்
தீர்க்கதரிசிகள்.

வரி கட்டினால்
இந்தியச் சிறை.
கட்ட மறுத்தால்
மத்தியச் சிறை!



''வரியைக் கட்டுங்கள்
எதிரியின் தாக்குதலிலிருந்து
நாங்கள் பாதுகாக்கிறோம்
என்கிறார்
பாதுகாப்பு அமைச்சர்.

பாதுகாக்க வேண்டாமா?
குஜராத்தில்
ஆசியாவிலேயே பெரிய
எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை
மதிப்பு 25,000 கோடி
அம்பானிக்கு சொந்தம்.

ஜாம்நகரில்
எஸ்ஸார் நிறுவனத்தின்
எண்ணெய் நிறுவனம்
மித்தாபூரில்
டாடா கெமிகல்ஸ்
ஸ்ரீநகரில்
உல்லாச நட்சத்திர விடுதிகள்

கூப்பிடு தூரத்தில்
பாக் ஏவுகணைகள்
பாதுகாப்பை எண்ணி

ஜிகாத் என்கிறது
பாகிஸ்தான்
தேச பக்திப் போர்
என்கிறது பா.ஜ.க.
வானத்திலிருந்து
சிரிக்கிறார் முர்டோச்.

பங்குச் சந்தை
கவலை கொள்கிறது.
பாதுகாக்க வேண்டாமா
நம் சொத்துக்களை!

எண்ணெய் ஆலையையும்
நட்சத்திர விடுதியையும்
முதுகில் தூக்கிக் கொண்டு
ஓட முடியுமா?

அவர்களுக்காகத்தான்
முதுகில் சோறுகட்டிக் கொண்டு
மலையேறுகிறார்கள்
நமது சிப்பாய்கள்.

நமது சொத்துக்களைப்
பாதுகாக்கிறது
நமது படை!

நல்லது.
எமது குடிசைகளை
ரியல் எஸ்டேட் முதலைகள்
ஆக்கிரமிக்கும்போது

எமது சேரிகளை
சாதிவெறியர்கள் கொளுத்தும்போது
எமது தொழிலாளர்களை
போலீசு படை தாக்கும்போது
எம்மைக் காப்பாற்ற
நம் படை வருமா?

அதற்குச்
செம்படை வரவேண்டும்
செம்படை வரும்போது
அரசு
நம் படையை ஏவும்.

அந்தப் போரில்
தேசபக்தர்கள்
யாருக்குக் காசு தருவார்கள்?

தேசநலன் வேறு
மக்கள் நலன் வேறு
எனப் புரியும் போது

எல்லைக்கோடு
தேசத்தைச் சுற்றி ஓடாது
தேசத்தின் குறுக்கே ஓடும்.

கனவான்களே
நீங்கள் அதைக்
கலகம் என்பீர்கள்
நாங்கள்
புரட்சி என்போம்.

●●

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்கப் பள்ளி வன்முறை:

# சந்தை வாழும்வரை ஹிட்லருக்கு மரணமில்லை

கடந்த ஏப்ரல் 20 அன்று, அமெரிக்கப் பள்ளி ஒன்றில் இரு மாணவர்கள் சக மாணவர்கள் 13 பேரைச் சுட்டுக் கொன்றார்கள் என்ற செய்தியை வாசகர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சக மாணவர்களையே வெறியுடன் கொல்லுமளவுக்கு என்ன காரணம்? இப்படுகொலை பற்றிய விவரங்களுடன் அமெரிக்க சமூகத்தினரிடையே ஒரு கருத்துப் பயணம் சென்று வந்தால், அதற்கு விடை காண முடியும்.

படுகொலை நடத்திய எரிக்ஹாரிஸ் (18 வயது) தைலான் லெபோல்டு (17 வயது) இருவரும் பங்களா, ஆளுக்கொரு கார் என வசதியாக வாழும் மேட்டுக்குடி மாணவர்கள். ஏனைய அமெரிக்க மாணவனைப் போல தினசரி இன்டர்நெட், திரைப் படங்கள், வீடியோ விளையாட்டு, ராக் இசை இவற்றிலேயே பல மணி நேரம் மூழ்கிக் கிடந்தவர்கள்.

இவர்கள் படிக்கும் கொலம்பைன் பள்ளியில் மாணவர்கள் சிலரால் உருவாக்கப்பட்ட ஒரு குழுவின் பெயர் டிரன்ஞ்ச் கோட் மாஃபியா (கோட் அணிந்த குண்டர் படை). வேடிக்கையாக ஆரம்பிக்கப்பட்ட இக்குழுவில் காலப்போக்கில் வெள்ளையின வெறியுடன் புதிய நாசிசக் கருத்துக்கள் பரவ ஆரம்பித்தன. எரிக்கும், தைலானும் அதில் முன்னணி வகித்தனர்.

வகுப்பு நடவடிக்கைகளிலும் அவை வெளிப்பட்டன. தாம் விரும்பாத மாணவர்களுடன் சில்லறைத் தகராறுகளில் ஈடுபட்டனர். ஆங்கில மனப்பாடம், புதுமைத்திறன் வகுப்புகளில் சாத்தானின் நரகம் பற்றிய் கவிதையைப் பாடினர். வீடியோ வகுப்பில் தமக்குப் பிடிக்காத விளையாட்டு மாணவர்களைக் கொல்வதுபோல் படம் பிடித்துச் சமர்ப்பித்தனர். இன்டர்நெட்டில் வெப்சைட் ஆரம்பித்து தமது கொள்கைகளை அறிவித்தனர். நெட்டிலேயே குண்டுகள் தயாரிப்பதையும், கள்ளத் துப்பாக்கிச் சந்தையையும் அறிந்து கொண்டனர்.

பல துப்பாக்கிகள் வாங்கினர். கார் நிறுத்தும் அறையில் 'பைப் குண்டுகள்' தயாரித்தனர். பள்ளியைத் தகர்க்கும் திட்டத்தைக் கணிப்பொறி உதவியுடன் வடிவமைத்தனர். தம்மை தீவிரக் கலகக்காரர்களாகவும், அடிமைப் படுத்தும் சமூகத்திற்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமெனவும், அவமதிக்கும் எவரையும் அழிக்க வேண்டுமெனவும், மொத்த உலகின் (பள்ளியின்) வாழ்வும், சாவும் தங்கள் கையிலிருப்பதாகவும் அவர்கள் கருதிக் கொண்டனர்; உறுதி பூண்டனர்.

நெடுங்காலம் இதைச் சுற்றியே தீவிரமாக இயங்கிய அவர்களது சிந்தனையும் செயலும் ஏப்ரல் 20 க்காகக் காத்திருந்தன. அந்த நாள் ஹிட்லரின் பிறந்த நாள்.

இருவரும் கருப்பு பனியன், முக மூடியுடன் கருப்புக்காரில் ஆயுதங்களுடன் புறப்பட்டனர். பள்ளியில் நுழைந்து மாணவர்களை விரட்டி, கேலி செய்து, கேள்வி கேட்டு நெற்றிப் பொட்டில் சுட்டனர். இறந்தவர்களில் வெள்ளையின மாணவர்கள்தான் அதிகம் என்றாலும், அவர்கள் கருப்பர்களைத் தேடினர். 'ஏசையா ஷீல்ஸ்' என்ற மாணவன் மட்டும் சிக்கினான். இம்மாணவனைச் சுட்டுக் கொன்று, ''ஒரு நீக்ரோவின் மூளை இப்படி சிதறிக்கிடப்பதைப் பார்ப்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா'', என்று குதூகலித்துக் கொண்டனர்.

முழுப் பள்ளியையே தகர்க்க வந்தவர்கள் அது இயலாதென்றதும், கையில் கிடைத்த 13 பேரை சுட்டுவிட்டு இறுதியில் தற்கொலை செய்து கொண்டனர். ஒரு அமெரிக்கச் சிப்பாய்கூடச் சாகாமல் ஈராக்கையும் செர்பியாவையும் உயர் தொழில்நுட்ப யுத்தத்தால் உட்கார்ந்த இடத்திலிருந்தே தரைமட்டமாக்கி விட்டு, தங்களது இராணுவ நடவடிக்கையைப் பற்றி அறிவுபூர்வமாக விளக்கிக் கொண்டிருந்த அமெரிக்க அறிஞர்கள், சொந்த வீட்டில் இழவு விழுந்தவுடன் உணர்ச்சி வசப்பட்டுக் கதறுகிறார்கள்.

இத்தேசிய சோகத்தை தொலைக் காட்சியில் பகிர்ந்து கொண்ட கிளிண்டன், ''பிரச்சினைகளைப் பேசித்தான் தீர்க்க வேண்டுமே ஒழிய துப்பாக்கியினால் அல்ல என்பதை நமது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்'' என்றார்.

உண்மைதான். ஆனால் உலகப் பிரச்சினைகளுக்குப் பீரங்கியால் தீர்வு காணும் கிளிண்டன், ''துப்பாக்கியால் தீர்வு காணக் கூடாது'' என்ற அன்பு மார்க்கத்தைத் தன் பிள்ளைகளுக்கு எப்படிக் கற்றுக் கொடுக்க முடியும்?

அமெரிக்க வன்முறைப் பண்பாட்டைத் தீர்ப்பதற்கான அவர்களது தீர்வுகள் எல்லாம் போகாத ஊருக்கு வழி காட்டுகின்றன என்பதைத்தான் அச்சமூக யதார்த்தம் நமக்குச் சுட்டுகின்ற உண்மை.

● ○ ●

80 - களுக்கு முன் தமது அறிவுத் தேடலை நூலகத்தில் நடத்திய அமெரிக்க மாணவர்கள் இன்று இன்டர்நெட்டில் சுற்றுகின்றனர். அப்படிச் சுற்றும் போதுதான் எரிக்கும், தைலானும் தமது ஆயுதச் சேகரிப்பை நெட்டின் உதவியால் செய்து முடித்தனர். கணிணியிலும், நெட்டிலும் மூழ்கிக் கிடப்பது அங்கே ஒரு வாழ்க்கை முறையாக மாறிவிட்டது.

இன்டர்நெட் - 20 - ஆம் நூற்றாண்டின் ஒரு அறிவியல் புரட்சிதான். எல்லை கடந்த பண்பாட்டு உரையாடல்கள், அறிவுப் பரிமாற்றம், தகவல் தொடர்பில் மாபெரும் புரட்சி என்பதெல்லாம் சரி. அதன் பயனையும், அளவுகோலையும் தீர்மானிப்பது யார்? அது வீட்டு அறைக்குள் உலகின் அழகையும், அறிவையும் மட்டும் கொண்டு வரவில்லை, அதன் அசிங்கத்தையும் அறிவீனத்தையும் சேர்த்தே கொண்டு வருகிறது. உலகின் மேலாதிக்க சக்திகள் தான் இன்டர்நெட்டையும் கட்டுப்படுத்துகின்றன. அதனால்தான் அது மொத்த உலக - மக்களின் வாழ்க்கையையும், நலனையும் பிரதிபலிப்பதில்லை.

தனிநபர் வாதம் அழுந்திப் போன மேற்கத்திய சமூகத்தை



● மாண்டவர்களுக்கு கொலம்பைன் பள்ளி ● மாணவர்கள் நடத்தும் பிரார்த்தனை ●



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை, செயல் இரண்டையும் தீர் மானிக்கின்ற கணிணிப் பண்பாடு, தனி நபர் வெறியாக மாற்றிவிட்டது. அதன் படி 'நெட்' மூலம் சீராட்டி வளர்க்கப்ப டும் அமெரிக்கக் குழந்தைகள், பல வகை களில் வெம்பிப் போகின்றனர். நிற வெறி, பாலியல்வக்கிரம், தீவிர மூடநம் பிக்கை, திருடுவது - குண்டு தயாரிப்பது போன்றவற்றை யாருமறியாமல் தனியா கத் தெரிந்து கொள்கின்றனர். அதன் போக்கில் சரி, தவறு பேதம் மறைந்து, சமூக நோக்கம் குறைந்தும் போகிறது.

அதனால் குழந்தைகள் பார்க்கக் கூடாத விசயங்களைத் தடுக்க, சென்சார், ரோந்து, தடுப்பான் போன்ற முறைகளை கணிணி நிறுவனங்கள் பெற்றோருக்கு உதவியாக அறிமுகப்படுத்தியுள்ளன. ஒரு சராசரி கணிணி அறிவு பெற்ற சிறுவன் இத்தகைய தடுப்பான்களைத் தகர்க்க முடியும் என்பது ஒருபுற மிருக்கட்டும். எதைப் பார்க்கலாம், கூடாது என்ற கொள்கையை யார் முடிவு செய்வது?

கம்யூனிச வெறுப்பில், வேண் டுமானால் பெற்றோர் - கணிணி நிறுவனங்கள் ஒன்றுபடலாம். பாலி யல் வெறி - ஒழுக்கம், மதம் - அறி வியல், பகுத்தறிவு - மூடநம் பிக்கை, தனிநபர் - சமூக உறவு - இவற்றில் அவர்கள் கொள்கை என்ன? வாழ்க்கையை சந்தை தீர் மானிக்கும்போது, அதன் மதிப்பீடு களை பைபிளா தீர்மானிக்க முடியும்?

கணிணியைக் கட்டுப்படுத்து வதில் உள்ள சிக்கல்களைப் போலவே, வன்முறை வீடியோ விளையாட்டைத் தடை செய்வதிலும் உள்ளது. சதைகளைப் பிய்த்து, எலும்பு களை நொறுக்கி உன்னால் எத்தனை பேரைக் கொல்ல முடியும் என்று சவால் விடும் 'டூம்' (பேரழிவு) என்ற வீடியோ விளையாட்டு அங்கே இப்போது பிரபல மாகிவருகிறது. ,எரிக்கும், தைலானும் இதைத்தான் விரும்பி விளையாடி னார்கள்.

அமெரிக்காவில் மரபு சார் விளை யாட்டுக்களை விட, முழு சமூகமும் வீடியோ விளையாட்டில் ஈடுபட்டே காலங்கழிக்கிறது. நோக்கமின்றி விளை யாடும் ஒருநபர் காலப்போக்கில் இயக்கு நர் என்பதிலிருந்து வீடியோவால் இயக் கப்படுபவராக மாற்றப்படுகிறார். இதைத்தான் போதை என்கிறோம். தடை களையெல்லாம் தகர்த்து, எதிரிகளைச் சின்னாபின்னமாக்கும் வித்தையை வீடியோ விளையாட்டில் கற்றுக் கொண்ட சிறுவன் தன்னை அதிஉயர் மனிதனாகக் கருதும் போலி மயக்க உணர்வில் ஆட்கொள்ளப்படுகிறான். அது, அவனது தினசரி வாழ்வின் சமநி லையைக் குலைக்கிறது. சிறு அளவு மன நிலைப் பிறழ்வும் ஏற்படுகிறது.

வன்முறை வீடியோவைத் தடை செய்யப் போராடும் டேவிட் கிராஸ் மென் கூறுகிறார், ''வன்முறை வீடியோ விளையாட்டுக்கள், கொலைக்கு எதிராக ஒரு மனிதனிடம் இயல்பாய் இருக்கும் மனித மதிப்பீடுகளை நொறுக்குகிறது. கொல்வதை ஒரு இன்பியல் அனுபவ மாகவும் கற்றுக்கொடுக்கிறது.''

எனவே வீடியோ விளையாட் டைத் தடை செய்ய முடியுமா? குறைந்த பட்சம் அதிலுள்ள வன்முறையை யாவது தணிக்கை செய்ய முடியுமா?

''திரைப்படத்தைப் போல வீடியோ விளையாட்டு ஒரு கலை உணர்வின் வெளிப்பாடு. அதன்படி அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் (First Amendment) வழங்கியிருக்கும் பேச்சு - கருத்துரிமை சுதந்திரத்தின் கீழ் அதைத் தடை செய்ய முடியாது. மேலும் வன்முறை அம்சங்களை வைத்திருக்கும் எதையும் தடை செய்ய வேண்டு மென்றால் முதலில் பைபிளைத் தடை செய்ய வேண்டுமே?''



தைலான் லெபோல்டு | எரிக் ஹாரிஸ்

நெற்றியடியாக அடிக்கிறார் லோவன்ஸ்டீன். இந்தக் 'கருத்துரிமைப் போராளி' யார் தெரியுமா? அமெரிக்க டிஜிட்டல் மென்பொருள் சங்கத்தின் தலைவர்.

எனவே வீடியோ விளையாட் டைத் தடுக்க முடியாது. துப்பாக்கியைத் தடை செய்ய முடியுமா என்று பார்ப்போம்.

அமெரிக்காவின் பல மாநிலங் களில் துப்பாக்கி வைத்திருக்க லைசன்ஸ் தேவையில்லை என்றாலும் வசதி படைத்தோரே அதை வாங்கிப் பரா மரிக்க முடியும். இருப்பினும் அமெரிக் காவில் பல ஆயிரம் துப்பாக்கிகள் வழக் கத்தில் உள்ளன. கொலம்பைன் படு கொலையை வைத்து துப்பாக்கியை தடை செய்வது தவறு எனக் கூறும் ஆயுத அதிபர்கள், ஒரு தனி நபர் தன்னைப் பாதுகாக்கும் உரிமையை மறுப்பது சட்ட விரோதம் என்பதையும் நினைவு படுத்து கின்றனர்.

ஆனால் அமெரிக்காவிலிருக்கும் துப்பாக்கிகள் தனிநபரைப் பாதுகாக் கவோ, திருடர்கள், ரவுடிகளைச் சுடவோ அதிகம் பயன்படவில்லை. மாறாக தற்கொலைக்கும், உறவினர் நண் பர்களைச் சுடுவதற்கும்தான் பயன்படுகி றது என்பதைப் பல கருத்துக் கணிப்புக் கள் நிருபணமாக்கியிருக்கின்றன.

ஆயுத அதிபர்களின் நன்கொடை யில் வாழ்வு பெறும் அரசியல் தலைவர் கள், துப்பாக்கி மற்றும் வன்முறை பிரச்சி னைகள் பற்றி தேசிய விவாதம் நடத்த லாமே என்று வாஜ்பாயி பாணியில் நழுவுகின்றனர். துப்பாக்கிக்கு ஆத ரவாக 'தேசிய துப்பாக்கி சங்கம்' (NRA) பல ஆண்டுகளாகப் போராடி வருகிறது. 'துப்பாக்கி வன்முறை அதிகமானால், சிறைகளைப் பெரிதாகக் கட்டலாமே'! என்பது இவர்களின் வாதங்களில் ஒன்று.

சில மாணவர்களின் வன் முறையில் பலியாகும் சில மனித உயிர்களைக் காட்டிலும் பல கோடி டாலர் புரளும் பல்வேறு ஆயுத - தளவாடத் தொழில்கள் முக்கிய மில்லையா?

சமூகத்தின் வன்முறைப் பிரச் சினைகளைத் தீர்ப்பதற்குத்தான் இவ்வளவு சிக்கல்கள்; குறிப்பிட்ட கொலம்பைன் படுகொலைக்காவது சட்டரீதியான நடவடிக்கைகள் ஏதும் உண்டா? முதல் பிரச்சினை, குற்றவாளி கள் இருவரும் இறந்து விட்டார்கள். தனது மகன்களின் தவறான நடத்தை யைப் பார்க்கத்தவறிய பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் மீது வழக் குப் போட முடியுமா? அது சரியல்ல. இம்மாணவர்களின் மிரட்டலைப் பற்றி புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக் காத போலீசு மீது முடியுமா? அதிலும் பிரச்சினை. அம்மாணவர்களுக்கு வெப் சைட் ஒதுக்கிய 'அமெரிக்கா ஆன் லைன்' நிறுவனத்தின் மீது முடியுமா? நிச்சயம் முடியாது. கள்ளச் சந்தையில் துப்பாக்கி வாங்கிக் கொடுத்த தரகர்க ளையாவது கைது செய்யலாமே? அங் கும் ஒரு சிக்கல். கொலம்பைன் பள்ளி இருக்கும் கொலராடோ மாநிலத்தில் 18 வயதடைந்த நபர் துப்பாக்கி வைத்தி ருக்க லைசன்ஸ் தேவையில்லை. எரிக் கின் வயது 18. இங்கும் வழிகள் அடை பட்டுவிட்டன. இறுதியில் படுகாயம டைந்த சில மாணவர்களுக்கு நிவாரண


படிப்பகம்

www.padippakam.com

நிதியாவது கிடைக்குமா என்று சட்ட வல்லுநர்கள் மண்டையைக் குடைகின்றனர்.

● ○ ●

இன்டர் நெட், வீடியோ, திரைப் படம், ராக் இசை, துப்பாக்கி - இவற்றிலிருக்கும் வன்முறை அம்சங்கள்தான் ஒரு அமெரிக்கச் சிறுவனின் கிரிமினல் நடவடிக்கைக்குக் காரணமா? ஆம், பெற்றோரின் அரவணைப்பு, பள்ளிகளின் வழிகாட்டல், மதத்தின் ஒழுக்கம், சமூக நிறுவனங்களின் அங்கீகாரம் போன்றவை முறையாக இருந்தால் வன்முறைப் பண்பாட்டை வேரறுக்க முடியும் என்பது அமெரிக்க அறிவாளிகளின் கருத்து. துளி அளவு கூட முடியாது என்பது நமது கருத்து. ஏன், எப்படி?

ஒரு மனிதனிடம் சகமனிதனைக் கொல்லும் வெறி ஏற்படுவதற்கு உளவியலைவிட சமூகவியல் காரணங்களே அடிப்படையாகும். எனினும் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்படும் மனச் சமநிலைப் பிறழ்வு விசேடமான உளவியல் காரணங்களையும் கொண்டிருக்கும்.

அமெரிக்கா மற்றும் மேற்குலகின் வன்முறைகளில் முக்கியமானது; அந்தச் சமூகங்களின் இயங்கு தன்மையே வன்முறையின் வேர்களைக் கொண்டிருக்கிறது என்பது தான். பிறக்கும்போதே ஒரு குழந்தையின் மூளை வன்முறைப் பதிவுகளோடு தோன்றுவதில்லை. சுமார் 15 வயது வரை, அதன் பதிவு நரம்புகள் சுற்றுப்புறச் சமூக வாழ்வின் அறிவை வேகமாகவும், துடிப்போடும் அறிந்து கொண்டு பதிவு செய்கின்றன. எதை, எப்படி, எங்கிருந்து கற்கிறது என்பதில்தான் வன்முறையின் கருவும் உருவாக முடியும்.

வன்முறை எண்ணம் தோன்றுவதற்கான மனவெறுமை, தனிமைவிருப்பம், தன்னிரக்கம், தோல்வி மனப்பான்மை, பொறாமை, வஞ்சகம், பாலியல் வெறி, நிறவெறி போன்ற பண்புகள் ஒரு முதலாளித்துவ சமூகத்தில் தவிர்க்க முடியாதது. அல்லது சந்தையை அச்சாணியாகக் கொண்டிருக்கும் ஒரு முதலாளித்துவச் சமூகம் இப்படித்தான் இயங்க முடியும். வேறு வழியில்லை.

கம்யூனிச நாடுகளில் ஒரு தனி மனிதனின் திறமைகளை நசுக்கி, சுதந்திரம் மறுத்து விலங்காக நடத்துகிறார்கள் என்பது மார்க்சிய எதிர்ப்பாளர்களின் முக்கிய அவதூறுகளில் ஒன்று. ஆனால் இத்தகைய கொலைகாரர்களோ இதே குற்றச்சாட்டை அமெரிக்க சமூகத்தின் மீது வைக்கிறார்கள். தாங்கள் கொலைகாரர்களாக மாறக் காரணமே இதுதான் என்கிறார்கள்.

மிசிசிபியைச் சேர்ந்த 16 வயது வுட்ஹாம் (சொந்தத் தாயையும், சக மாணவர்கள் மூவரையும் கொன்றவன்) கூறும் வாக்குமூலத்தைப் பாருங்கள். ''நான் ஒரு பைத்தியமல்ல.... என்னைச் சோதிக்கும் இவ்வுலகை வெறுக்கிறேன்.... சமூகம் எங்களைத் தள்ளினால் நாங்களும் திருப்பித் தள்ளுவோம் என்பதை உணர்த்தவே இக்கொலைகளைச் செய்தேன்... இது உங்கள் கவனத்தை ஈர்த்து, உதவி கோரி கெஞ்சுவதற்கு அல்ல. இது, தவிர்க்க முடியாத ஒரு வன்முறைப் போராட்டத்தின் அலறல். உங்கள் கண்களை என்னால் திறக்க முடியவில்லை என்றால், வன்முறை தவிர்த்த வழிகளில் அதைச் செய்ய முடியவில்லை என்றால் அறிவுப்பூர்வமாகவும் அதைக் காண்பிக்க முடியவில்லை என்றால், பிறகு ஒரு துப்பாக்கிக் குண்டின் மூலம் அதைச் செய்து முடிப்பேன்.''

முதலாளித்துவ நாடுகளில் ஒரு




தேசியத் துப்பாக்கிச் சங்கத்தை எதிர்க்கும் ஆர்ப்பாட்டத்தில், கொலம்பைனில் மாண்டுபோன டேனியலின் தந்தை கிம் மாசூர் பேசுகிறார்.

தனிநபர் சமூகத்துடன் எவ்வளவு தீவிரமாக முரண்பட முடியும் என்பதற்கு இந்தக் கொலைகார மாணவனின் 'கவிதை' வரிகளே சான்று. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கிடையே சந்தைப் போராகவும், முதலாளித்துவ நாடுகளிடையே ஆக்கிரமிப்புப் போராகவும் வெளிப்படும் முரண்பாடு, தனிநபர்களுக்கிடையிலான உறவுகளையும் சீர்குலைக்கிறது.

ஒரு வயது வந்த அமெரிக்க மாணவன் தன் சமூகத்திடம் கற்கும் முக்கிய நீதி ''வாழ்க்கையில் வேகமாய் ஓடு, இடையூறுகளை இரக்கமின்றி தாண்டு, வெற்றி பெற்றால் பணமும் ஆடம்பரமும் கொண்ட அமெரிக்க வாழ்க்கை நிச்சயம்; தோல்வியுற்றால் எதுவுமில்லை'' - என்பதுதான்.

அதனால்தான் உதட்டிலே சிரிப்பும் உள்ளத்திலே வெறுப்பும், கைகுலுக்கலில் நட்பும் கால்வாருவதில் பகையும், தோற்றத்தில் கவர்ச்சியும் நடத்தையில் அசிங்கமும், பேச்சில் நளினமும் முடிவெடுப்பதில் இரக்கமின்மையும், தனி வாழ்க்கையில் ஆடம்பரமும் சமூக வாழ்க்கையில் அவலங்களும் - அங்கே ஒரு சமூகப் பண்பாக உள்ளது. அமெரிக்காவின் நிழலும் - நிஜமும் இதுதான்.

80-களுக்குப் பிறகு உற்பத்தியில் ஏற்பட்ட நவீன மாற்றம், உலக மயமாக்கத்தினால் பல்லாயிரம் அமெரிக்கர்கள் வேலையிழந்துள்ளனர். செல்வந்தர்கள், சாதாரண மக்களின் வாழ்க்கை வேறுபாடும் முன்பைவிட அதிகரித்திருக்கிறது.

92 - லாஸ்ஏஞ்செல்ஸ் கருப்பர் - வெள்ளையர் கலவரம் இறுதியில் அரசு - வணிக நிறுவனங்களைச் சூறையாடுவதில் முடிந்தது இதற்கோர் சான்று. அதன்பின் கலிபோர்னியா மாநிலத்தில் இலட்சாதிபதிகள், கோடீசுவரர்களுக்கு பாதுகாப்புக் கோட்டையுடன் கூடிய ஒரு தனி நகரையே உருவாக்கிவிட்டார்கள்.

எங்கு சென்றாலும் வன்முறையின் பீதியிலிருந்து அவர்கள் தப்ப முடியுமா? உலக மயமாக்கத்தின் சுரண்டலைச் சுருட்டும் அமெரிக்கா, அதன் கேடுகளின் பெரும்பகுதியை மூன்றாம் உலக நாடுகளின் மீதும், சிறுபகுதியைத் தன் நாட்டு மக்கள் மீதும் செலுத்தி வருகிறது. ஆடம்பரம், ஏழ்மை இரண்டுமே வன்முறையின் பிடியிலிருந்து நழுவமுடியாது.

கொலம்பைன் படுகொலை குறித்த அவர்களது கவலைகளும், வாதங்களும் இத்தகைய இருமைப் பண்புகளைக் கொண்டு இக்கட்டில் நிற்கின்றன. வன்முறைகளை அடக்குவதற்கான வழிகள் தெரிவது போல் தெரிந்து பின்னர் மறைகின்றன. அமெரிக்க ஏகாதிபத்திய சமூகம் என்ற மாபெரும் முடிச்சை அவிழ்க்காமல் இதற்கு வழி ஏதுமில்லை.

வன்முறை பற்றிய பீதியை உருவாக்கினால்தான் துப்பாக்கிகள் விற்க முடியும். பாலுணர்வு வெறியைக் கிளப்பினால்தான் வயாக்ரா விற்கமுடியும். அழகின்மையை உணரவைத்தால்தான் அழகு சாதனங்கள் விற்பனையாகும். எய்ட்ஸ் பயத்தைக் கிளப்பினால்தான் ஆணுறையை விற்க முடியும். நுகர்பொருள் வெறியை அவிழ்த்துவிட்டால்தான் வட்டி - வங்கித் தொழில் வளரும். ஆம். நோயைப் பரப்பினால்தான் மருந்துகள் விற்பனையாகும். அமெரிக்க வாழ்க்கைத்தரம் என்ற வசதியைப் பெறுவதற்கு, அமெரிக்க மக்கள் கொடுக்கும் காணிக்கைப் பலிகளே, இப்பள்ளிப் படுகொலைகள்.

● இளநம்பி


படிப்பகம்

www.padippakam.com

# நாயனார் அழைக்கிறார்:

# வாங்கண்ணா, வாங்க!

''மாநிலங்களின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொள்கின்ற கொள்கையைத்தான் காலங்காலமாக மத்திய ஆட்சியாளர்கள் பின்பற்றி வருகிறார்கள்... வருவாய்ப் பற்றாக்குறையினால் மூச்சுத் திணறுகின்ற மாநில அரசின் மற்றொரு வருவாய் மார்க்கத்தை மூடவும் செய்கின்ற மத்திய அரசின் முடிவை எதிர்த்து அனைவரும் குரல் எழுப்ப வேண்டும்.''

இது ஏதோ மாநிலத்தின் தொழில் உரிமையை, கனிம வளங்களைப் பறித்துக் கொண்ட மத்திய அரசுக்கு எதிராகப் போராடும் மாநில அரசின் போர்க் குரல் என்று எண்ணாதீர்கள். லாட்டரி கமிசன் போய்விடுமே என்ற ஆவேசத்தில் கேரள மார்க்சிஸ்ட் கட்சி எழுப்பியுள்ள 'உரிமைக் குரல்' இது.

''மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலே, உயர்திரு காவல்துறை அதிகாரி அவர்கள் முன்னிலையிலே'' மாபெரும் குலுக்கலை நடத்தும் மாநில அரசின் உரிமையைப் பறிக்க முயலும் மைய அரசுக்கெதிரான போர் முழக்கம்.

கே.ஏ.எஸ். சேகர், ஜனாப் ஹாரூண் போன்ற லாட்டரி உலகத்தின் 'ஜனநாயக சக்திகள்' புதுதில்லியில் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டம், பேரணி, சிறை நிரப்பும் போராட்டம் என்று எச்சரித்துத் தலைநகரத்தையே 'குலுக்கி' விட்டனர்.

''லாட்டரியைத் தடை செய்தாலென்ன, ஒழியட்டும் இந்த சூதாட்டம்'' என்று நினைக்கும் பாமர மக்களுக்கு மாநில உரிமை போன்ற கனமான விசயங்களையெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது என்பதால் இதைத் தொழிலாளர் பிரச்சினையாக்கி விட்டார்கள்.

லாட்டரிக்குத் தடை கூடாது என்று லாட்டரி விற்பனைக்கு வக்காலத்து வாங்கும் கைராசி கண்ட மன்னர்கள் முதல் கமிசன் கண்ட (கேரள) மார்க்சிஸ்டுகள் வரை அனைவரும் முன் வைக்கும் காரணம், பல லட்சம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு பறிபோகும் என்பது தான்.

''ஒரேயொரு சீட்டு வாங்குங்கண்ணே'' என்று பேருந்தில் உங்களிடம் கெஞ்சும் சிறுவனின் பரிதாபகரமான பார்வையையும், சென்னை ரயில்களின் நெரிசலில் கண் தெரியாமல் தடுமாறியபடியே கையில் பரிசுச் சீட்டுடன் உங்கள் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் பார்வையற்றவர்களையும், கையில் பரிசுச் சீட்டுக் கட்டுடன் கொளுத்தும் வெயிலில் தெருத்தெருவாக அதிர்ஷ்டசாலிகளைத் தேடித் திக்கற்றவர்களைப் போல அலையும் முதியவர்களையும் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

''பரிசுச் சீட்டைத் தடை செய்வதன் மூலம் இந்த பாவப்பட்ட ஜென்மங்களின் வாயில் மண்ணள்ளிப் போடப் போகிறீர்களா?'' என்று மார்க்சிஸ்டுகள் கேட்கும் போது கல்நெஞ்சும் கொஞ்சம் கரையத் தான் செய்யும்.

லாட்டரியைத் தடை செய்தால் விற்பவர்கள் பட்டினி கிடக்க நேரும்; அனுமதித்தால் சீட்டு வாங்குபவனின் குடும்பம் பட்டினி கிடந்து சாகும். தற்கொலைகள் நடக்கும்.

லாட்டரி சீட்டு வாங்கும் பழக்கத்தால் பல குடும்பங்கள் தெருவுக்கு வந்ததும், வருமானத்தையல்ல, வாழ்க்கையையே இழந்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

சென்ற தீபாவளியின் போது திருச்சி பெல் தொழிலாளி ஒருவர் போனஸ் பணம், சம்பளம் முழுவதையும் சுரண்டல் லாட்டரியில் இழந்து விட்டு ஏமாந்த சோகத்தில் விசம் குடித்து தற்கொலை செய்து கொண்டதை பத்திரிகைகள் வெளிஉலகிற்கு கொண்டு வந்தன. பெல் மட்டுமல்ல பல தொழிற்சாலைகளில் பிடித்தம் போக சம்பளப் பணத்துடன் வெளியே வரும் தொழிலாளிகள் பித்துப் பிடித்தவர் போல் நேரே லாட்டரி கடைக்குப் போவதும், கத்தை கத்தையாக சீட்டுகள் வாங்குவதும் இதுவே பழக்கமாகி பெருவாரியான பணத்தை கஜலெட்சுமி, சுபலெட்சுமி என பல லெட்சுமிகளிடம் இழந்து கடன் சுமை ஏறி கடன் தந்தவர்களின் வசவு, வாக்குவாதத்தால் குடும்பமே தற்கொலை செய்து கொள்வதும், பல குடும்பங்கள் வீதிக்கு வருவதும் தொடர்கதையாக நடக்கின்றன.

''சம்பாத்தியம் முழுவதையும் லாட்டரிச் சீட்டு வாங்கியே அழிந்துபோன பல குடும்பங்களை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. எனவே லாட்டரியை மத்திய அரசு தடை செய்துள்ளதை வரவேற்பதாக சென்னையை சேர்ந்த மனநோய் மருத்துவர் ஒருவர் பேட்டி கொடுத்திருக்கிறார். (தினமணி 12 ஏப். 99). ''கண்மூடித்தனமாக லாட்டரி வாங்கியதற்காக தினந்தோறும் அரசு மருத்துவமனைகளில் 3 பேர் அனுமதிக்கப்படுவதாகவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

மும்பையைச் சார்ந்த நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வின்படி லாட்டரி சீட்டுகளை வாங்கி ஏமாறுபவர்களில் 73% பேர் படிப்பறிவில்லாத பாமர மக்கள். இதுபோல் பெங்களூர் நிறுவனமான ''இன்ஸ்டிடியூட் ஆஃப் சோசியல் அண்டு எக்கனாமிக் சேஞ்ச்'' செய்த கள ஆய்வின்படி லாட்டரிச் சீட்டுகளை வாங்குபவர்களில் 86% எந்த வசதியும் இல்லாத ஏழைகள். இதுதவிர குஜராத் மாநிலத்தில் மேற்கொண்ட ஒரு கணக்கெடுப்பின்படி லாட்டரி சீட்டுகளை வாங்குபவர்களில் பலரின் மாத வருமானம் 250 முதல் 1000 ரூபாய் வரை எனத் தெரிய வந்துள்ளது.

இந்தியாவிலேயே அதிக லாட்டரி சீட்டு விற்பனையாகும் தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. இதுபற்றி குஜராத் ஏழைகளிடம் விசாரித்தால் ''நம்மால் இனி சம்பாதித்து பணக்காரராக இயலாது. இது ஒன்றே வழி'' என்று கூறுகிறார்களாம்.

உடல் ஊனமுற்றவர்களுக்காகக் கண்ணீர் சிந்தும் கைராசி மன்னர்களும் கம்யூனிசப் போலிகளும், ''லாட்டரி

வட கிழக்கு மாநில லாட்டரிகளை நடத்தி வந்த சேர்ந்த மணிக்குமார் சுப்பா ஒரு அசாம் எம்.பி. (காங்கிரஸ்) இதுவரை இவர் நடத்திய 83 ஆயிரம் குலுக்கல்களில் மோசடி நடந்துள்ளது என்பது சமீபத்திய செய்தி. அதில் நாகலாந்து மாநில லாட்டரியில் மட்டும் ரூ. 24 ஆயிரம் கோடி மோசடி நடந்துள்ளது. வடகிழக்கு மாநில லாட்டரிகள் அதிகம் விற்கும் மாநிலம் - தமிழ்நாடு.


படிப்பகம்

www.padippakam.com

**''இந்தியாவிலேயே முதன் முறையாக கேரளத்தில் 1956-ஆம் ஆண்டு, பரிசுச் சீட்டு குலுக்கல் முறையை அறிமுகப்படுத்திய கைராசி மன்னன் - கே.ஏ.எஸ். சேகரல்ல, இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு!''**

தான் விடிவுக்கு வழி'' என்று மனம் ஊன முற்றுப் போன மக்களுக்கு என்ன வழி சொல்வார்கள்?

கையில் பத்து பரிசுச் சீட்டுகளை வைத்துக் கொண்டு தெருத் தெருவாக அலையும் கண் பார்வையற்றவர்கள் ஒரு புறமிருக்கட்டும்; பத்து கோடி, இருபது கோடி பரிசுச் சீட்டுகளை மாதந்தோறும் விற்பனை செய்யும் கைராசி மன்னன் கே.ஏ.எஸ். சேகரும், ஜனாப் ஹாரூனும் கண்பார்வையற்றவர்களா? கை, கால் விளங்காத முண்டங்களா?

அல்லது தமிழகத்தின் எல்லாக் கடை வீதிகளிலும் குழல் விளக்குகள், நியான் விளக்குகள் எரிய சொர்க்க லோகம் போல ஜொலிக்கும் பரிசுச் சீட்டு கடைகளை நடத்தும் முதலாளிகள் தொழுநோயாளிகளா? ஆதரவற்ற அநாதைகளா?

உண்மையில் கோடி கோடியாய் போலிச் சீட்டுகளை அடித்து கொள்ளை யடிப்பது லாட்டரி சீட்டு தனியார் முதலாளிகள் தான். இன்னும் சொல்லப் போனால் இதில் அரசுக்கு கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவு. அரசுக்கு 200 கோடி வருவாய் என்றால் இவர்களுக்கு 400 கோடி போய்ச் சேரும். அதனால் தான் ஒருசில லாட்டரிச் சீட்டு ஏஜெண்டு களே போட்டி அரசாங்கம் நடத்துபவர் போல துறைக்கு ஓர் ஆள் வைத்துக் கொண்டு வாகன வசதிகளுடன் மாவட்ட வட்டங்கள் தோறும் அரசு அலுவலகங்கள் போல கிளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் அதிகார வர்க்கத்தினர் அடிக் கும் கொள்ளைக்கும் அளவே இல்லை. பெரும்பாலான மாநிலங்களில் லாட்ட ரிக்கென்றே தனித்துறை இயக்குநர், ஊழியர் பட்டாளமே உண்டு. இந்தக் கொள்ளை கூடாரத்திற் குத் தான் மார்க்சிஸ்டுகள் தலைமை தாங்கத் தலையை நுழைக்கிறார் கள்.

''விற்பனையாகும் ஒவ்வொரு 5 சீட்டுகளி லும் ஒரு சீட்டு போலியா கும்'' என்று மத்திய அரசின் புலனாய்வுத் துறையே ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கியுள்ளது.

பெரும்பாலான மாநிலங்கள் தங்க ளது லாட்டரியை நடத்துகின்ற பொறுப்பை தனியார் நிறுவனங்களிடம் விட்டு விடுகின்றன. சீட்டை அச்சிடு வது, விற்பனை, பரிசு வழங்கல் வரை அனைத்தையும் இந்த ஒப்பந்தக்காரர் களே பல தில்லுமுல்லுகளைச் செய்து ஏழைகள் பணத்தைச் சூறையாடி அற்பக் கமிசனை மட்டுமே அரசுக்குத் தருகின்ற னர்.

சென்னையில் பல நடைபாதைக் கடையினர், கண் பார்வையற்ற விற்ப னையாளர்களுக்கு முன் தொகையில்லா மல் இவர்கள் சீட்டுகளை தருவதில்லை. 'கைராசி' மன்னர்களின் கவலையெல் லாம் லாட்டரி தடை செய்யப்பட்டால் மேலும் கொள்ளையடிக்க முடியாது என் பதே.

ஏனெனில் லாட்டரியை இந்த கணத்தில் தடை செய்தாலும் ஏற்கனவே அவர்கள் அடித்த கமிசன் பல ஊர்களில் சாராயக்கடை ஏலத்திலும், ரியல் எஸ் டேட் லாபத்திலும் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரே நிமிடத்தில் இந்த சூதாட்ட வள்ளல்கள் ஊருக்கு ஊர் சந்தடி மிகுந்த இடங்களில் பிடித்து வைத் திருக்கும் கடைகளை சாராயக்கடைகளா கவோ, சாக்கனாக் கடைகளாகவோ மாற் றிக் கொண்டு மகசூல் காண முடியும். ஏஜெண்டுகளை வாழ வைத்த விற்பனை யாளர்கள்தான் தெருவே கதியென்று திரும்ப வேண்டும்.

ஆனால் மார்க்சிஸ்டுகளின் மனமோ உடனே பணிப் பாதுகாப்பு, நிரந்தர ஊதியம், லாட்டரியில் தனியார் மய எதிர்ப்பு என்று இறங்கி அதிலும் சங்கம் கட்டி சந்தா சேர்க்கத் துடிக்கிறது.

சாதாரண விற்பனையாளர்களை துருப்பு சீட்டாக்கி லாட்டரி சீட்டுகளால் மக்கள் பணத்தை சூறையாடும் ஏஜெண் டுகளையும், அவர்களின் அரசியல் எடு பிடிகளையும் அம்பலப்படுத்துவதோடு மக்களிடம் திணிக்கப்பட்ட லாட்டரி சீட்டு மோகத்தையும், எப்படியாவது அதிர்ஷ்டத்தால் நாமும் பணக்காரர் ஆகி விடலாம் என்ற மூட நம்பிக்கையையும் நாம் ஒழிக்க வேண்டி உள்ளது.

வெறும் பொருளாதார இழப்பு என்று மட்டுமின்றி பண்பாட்டு ரீதியாக எதையும் போராடிப் பெறுவதற்கு பதி லாக அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைப் பது, லாட்டரிசீட்டு எண்களை கூட்டுவ தன் மூலமாக ஒரு குறிப்பிட்ட எண் வந் தால் பரிசு விழும் என்ற பிற்போக்குத்த னத்தை ஏற்பது, ரோட்டில் போகும் சிறிய குழந்தைகளைக் கூப்பிட்டு சீட்டை எடுக்க வைத்து இந்த அதிர்ஷ்டக் கிரு மியை அவர்களுக்கும் தொற்ற வைப்பது என்று ஒரு சமூக பண்பாட்டு பிரச்சினை யாகவும் இது பரவி வருவதை நாம் அனு பவத்தில் உணர முடியும்.

''இந்தத் தொல்லைக்காகத்தான் இப்ப பேப்பரே வாங்கறதில்லை. டீ போடச் சொல்லிட்டு நம்பரப் பார்த்த கொழப்பத்தில காசும் கொடுக்காம திடீர்னு போயிடுறானுங்க. நாம வேலைய முடிச்சிட்டு பேப்பரப் பீடிக்க லாம்னா, போட்டு கசக்கி·கந்தலாக்கி சம யத்துல லாட்டரிசீட்டு ரிசல்ட் பக்கம் மட் டும் காணாம போயிடுது'' என்று டீக்க டைக் காரர்கள் புலம்பும் அளவிற்கு பரிசு சீட்டு மோகம் படாதபாடு படுத்துகிறது. ''அதிர்ஷ்டம்'' போன்ற பத்திரிகைகள் நடத்தும் அளவுக்கு மக்களிடம் ''தேடல் அறிவு'' முளைத்துள் ளது. இது வெறும் நம்பி ஏமாறும் விவகாரம் மட் டுமல்ல.

ஒரு மாதக் குலுக்கல் முடிவுவரை காத்திருக்க முடியாமல் வெறி உச்சத் திற்கு போனமாதிரி உட னடி லாட்டரி, சுரண்டல் லாட்டரி என்று பணத்தை இழந்தவர்களுக்கு பணம் போனதுடன் தீவிரமாகச் சுரண்டி சுரண்டி கை நடுக் கம் வந்து நரம்புகள் பாதிக்கப்பட்டவர்களும் உண்டு.





படிப்பகம்

www.padippakam.com

**"தமிழகத்தில் எல்லாக் கடை வீதிகளிலும் குழல் விளக்குகள், நியான் விளக்குகள், எரிய சொர்க்கலோகம் போல ஜொலிக்கும் பரிசுச் சீட்டு கடைகளை நடத்தும் முதலாளிகள் தொழுநோயாளிகளா? ஆதரவற்ற அநாதைகளா?**

பாமர மக்களுக்குக் கூடத் தெரிந்த இந்த விசயங்களெல்லாம் மார்க்சிஸ்டுகளுக்குத் தெரியாதா? அவர்களென்ன அப்பேர்ப்பட்ட மடையர்களா என்று வாசகர்கள் ஆச்சரியப்படலாம். அவர்கள் மடையர்கள் அல்ல; அவர்கள் மக்களை மாங்காய் மடையர்கள் ஆக்குகிறார்கள்.

ஊனமுற்றவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் ஆகியோரை நிராதரவாக்கி கஞ்சா, சாராயம், லாட்டரிச் சீட்டு விற்று வாழவேண்டிய நிலைக்குத் தள்ளிய இந்தச் சமூக அமைப்பை, அவர்களது 'வாழ்வுரிமை'யைப் பறித்த பாராளுமன்ற அரசியல் மோசடியை ஒழிக்கப் போராடுபவர்களைத் 'தீவிரவாதி' என்று ஆள் காட்டி விடுவார்கள். லாட்டரிச் சீட்டு விற்பது எங்கள் வாழ்வுரிமை என பாராளுமன்றத்தின் வாயிலில் ஊனமுற்றவர்களைத் திரட்டித் தர்ணா நடத்துவார்கள்.

ஒவ்வொரு தேசிய இனமும் தன் தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை வேண்டும் என்று கேட்டால் அதைப் 'பிரிவினைவாதம்' என்று சொல்லி டில்லிக்குக் கங்காணி வேலை செய்வார்கள். ஆனால் ஜெயலலிதா மீது ஊழல் வழக்கு போட ஆளுநர் அனுமதி தந்தால் அது 'மாநில உரிமை'யில் தலையிடுவது என்று கூறி வழக்கு போடுவார்கள். அல்லது சூதாட்டம் நடத்துவது 'மாநிலத்தின் உரிமை' என்று போராட்டம் நடத்துவார்கள்.

"கள்ள லாட்டரியை ஒழிப்போம்" என்று முழங்குவார்கள். லாட்டரி நடத்தும் முதலாளிகள் அனைவரும் கள்ளர்கள் என்பதை மறைப்பார்கள். சுரண்டல் லாட்டரியை எதிர்ப்பார்கள்; லாட்டரியே சுரண்டல் என்பதை மறைப்பார்கள்.

இப்படி முதலாளித்துவம் கிழித்த கோட்டைத் தாண்டாமல் அதன் வரம்புக்குள்ளேயே நின்றுகொண்டு நாயா - நரியா, ஊழலா - மதவாதமா, கள்ள லாட்டரியா - நல்ல லாட்டரியா என்ற லாவணியில் மக்களை இழுத்து விடுவது தான் மார்க்சிஸ்டுகளின் அரசியல்.

லாட்டரிச் சீட்டைத் தெருவில் கூவி விற்பவனும் ஏழைதான். அதை வாங்கி அழிபவனும் ஏழைதான். ஏழைகளின் கட்சியான கம்யூனிஸ்டு கட்சி, எந்த ஏழையை ஆதரிப்பது?

போபால் விச வாயுப் படுகொலைக்குப் பின் யூனியன் கார்பைடு ஆலை மூடப்பட்டது. பாதிக்கப்பட்ட ஏழைகளும், படுகொலை செய்யப்பட்டோரின் குடும்பத்தினரும் ஆலையைத் திறக்கக் கூடாது எனப் போராடினார்கள். "நாங்கள் வேலையில்லாமல் பட்டினி கிடக்கிறோம்; ஆலையைத் திற" என்று கோரினார்கள் தொழிலாளர்கள். யாருடைய கோரிக்கையை ஆதரிப்பது?

விஸ்கோஸ் ஆலைக் கழிவால் நிலத்தடி நீர் கெட்டுவிட்டதென்று ஆலையை மூடச் சொல்கிறார்கள் விவசாயிகள்; எங்கள் வேலை போய் விட்டதென்று ஆலையைத் திறக்கச் சொல்கிறார்கள் தொழிலாளிகள்.

அவனைப் பொறுத்தவரை அது சரி, இவனைப் பொறுத்தவரை இது சரி

**போபால்: மனைவி, மூன்று குழந்தைகளைக் கொன்று, தற்கொலை செய்து கொண்ட மான்ஷ்ராம். லாட்டரியில் விட்ட தொகை ரூ. 50,000**



என்று இரண்டு பக்கமும் சந்தா வசூலிப்பார்கள் மார்க்சிஸ்டுகள். ஒவ்வொரு மக்கள் பிரிவினரையும் அவரவரின் நலன்களுக்காகத் திரட்டிப் போராடுவது என்ற பொருளாதாரவாதம் தான் மார்க்சிஸ்டுகளை இந்த முச்சந்திக்குக் கொண்டு வந்திருக்கிறது.

கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்று என்று விஸ்கோஸ் தொழிலாளர்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடு என்று யூனியன் கார்பைடு தொழிலாளர்களும் போராடுவதற்குக் கற்றுத் தருவதும், உணர்வூட்டுவதும் தான் கம்யூனிஸ்டுகளின் பணி. அதுதான் பொது எதிரிக்கு எதிராக உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்தும் வழி.

ஆனால் மார்க்சிஸ்டுகளோ சூதாட்டம் நடத்தி ஊர் குடியைக் கெடுப்பது எங்கள் வாழ்வுரிமை, மாநில உரிமை என்று கைராசி மன்னர்கள் தலைமையில் குரல் கொடுக்கிறார்கள்.

ஏற்கெனவே தீக்கதிர் நாட்காட்டியில் பண்டிகை, நல்ல காலம் போடுவது, கேரளத்தில் கோவில் அறங்காவலர் குழுவில் நுழைந்து கொண்டு சிவப்பு துணி பிடித்து கும்பம் தூக்குவது, திருப்பதி தேவஸ்தான குருக்களிடம் தொழிற்சங்கம் கட்டி சந்தா வசூலிப்பது என்ற பரிணாமத்தில் இப்பொழுது லாட்டரி சீட்டு ஏஜெண்டுகளையும் வென்றெடுக்கப் புறப்பட்டு விட்டார்கள் இந்தப் போலி கம்யூனிஸ்டுகள். சந்தாவுக்குச் சங்கம், பந்தாவுக்கு சிவப்புத் துணி!

இனி கடைவீதியில் "வாங்கண்ணா வாங்க" என்று யாராவது அழைத்தால் அது லாட்டரிச் சீட்டு வியாபாரி என்று அலட்சியம் செய்து விடாதீர்கள். அந்தக் குரலுக்குரியவர் மார்க்சிஸ்டு கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருக்கலாம். 'குலுக்கல் முறையில் வர்க்க பேதத்தை ஒழிப்பது எப்படி' என்று அவர் உங்களுக்கு விளக்கக் கூடும்.

ஏனென்றால் இந்தியாவிலேயே முதன் முறையாக 1956-இல் கேரளத்தில் பரிசுச் சீட்டை அறிமுகப்படுத்திய கைராசி மன்னன் — கே.ஏ.எஸ். சேகரல்ல, இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு!

● துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

# அம்மா



○○ அம்மா!

உனக்கென்னை
பிடிக்காமல் போகலாம்.
பரவாயில்லை.

உன் கனவுகள்
நொறுங்கியிருக்கலாம்.

வருந்துகிறேன்.

என்றாலும்
எனக்காகவும் நீ
கொஞ்சம் பெருமைப்படலாம்.

○○ காவல் நிலையமே
போகாத பரம்பரை
என்பதில்
அப்படியென்ன கர்வமுனக்கு!

அவர்களும் நம்போலத்தான்
ஏறக்குறைய அடிமைகள்.

வில்லாளிகளை விட்டு
அம்புக்கு பயந்தென்ன
ஆகப் போகிறது?

○○ போராடுதல் இயல்பு.

உரிமைக்காக
போராளியாய் நிற்பதில்
இழப்புகளொன்றும்
செய்வதில்லை.

எனக்கு முன்னால்
வீரஞ்செறிந்த வரலாறு
இருக்கிறது.

பின்னும் எழும்.

நான் தனியானவனில்லை
அம்மா!

○○ அறிவும் சொற்களும்
இணைந்தால் கூடி

விடுதலையை
விளக்குவது எளிதல்ல.

ஆம்!
உணர்தலே விடுதலை.

உன்
கண்ணீரைக் கயிறாக்கி
என்னைக் கட்டி விடாதே!

இவை
உனக்கும் எனக்கும்
நமக்குமானவை



○○ அம்மா!

நீ கூண்டில்
குஞ்சு பொரித்தாய்!

நான் களத்தில்...

நம் சந்ததிகளுக்கேனும்
வாய்க்கட்டும் வானம்!

• தீபன்



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீர்

உன்னோட படிச்சதெல்லாம்
ஊக்கமா பொழைக்குதுங்க,
கச்சி கட்சியின்னு
கட்சிக்கட்டிக்கினு
அலையிரியே....

சித்தாகாட்டு வெறகுவெட்டி
செட்டிகுளம் தண்ணிமொண்டு,
செவ்வெண்ணெய் கூட்டினது
எந்தக் கட்சி?

வெய்யில் கானலுன்னு
பாக்காம,
கையும் காலையும்
தூக்கிக்கினு,
கூலிக்கு ஓடுன எடத்துல,
ஊத்துன கூழு கஞ்சிய
தூக்கியாந்து,
பள்ளிக்கோட வாசல்ல
உன்னையக்
குடிக்க வச்சிட்டு
கூட்டி முழுங்குன
நெஞ்சுடா!

மறக்க முடியுமா
அம்மா!

எல்லோரும்
புள்ள வளத்தது போலவா
வளத்தேன்,
போலீஸ் புடிச்சிம்போய்
இருக்குமாமே,
எந்த தெய்வம் வந்து
குறுக்க நின்னுச்சோ!

'தெய்வமா'
அம்மா!

காது மூக்குல
கெடந்ததை உருவி,
கால் வவுத்தக் காப்பாத்துன
கழனிக் காட்டையும்
கை கழுவிட்டு,
கையேந்த வச்சிட்டேன்ற
கர்வமாடா?

எனக்கா அம்மா?

●

அம்மா நீ
பேசி முடித்து விட்டாயா,
அழுது தீர்த்துவிட்டாயா?

பக்கத்து வீட்டுப் பிள்ளைகள்
காணாமல்
நீ பதுக்கிய திண்பண்டங்கள்
உரியில்
எனக்காக.

நீ காணாமல்
அண்ணி பதுக்கிய திண்பண்டங்கள்
உரியில்
அவள் பிள்ளைக்காக.

கஞ்சி கொடுத்தாய்
காதுத்தோட்டைக் கொடுத்தாய்
எனக்கு
உரி வேண்டாம் அம்மா.

பதுக்குவதற்கு ஒன்றுமில்லை
என்னிடம்
என்பதற்கா அழுகிறாய்?

●

"தனக்கு மிஞ்சிதாண்டா
தான தருமம்
உன் குடும்பத்தைக் காப்பாற்று,
ஏழை பாழைக்கு
ஏதோ முடிஞ்சதைக் கொடு"

உன்னையும் என்னையும் சேர்த்து
ஒரு வளையம் போட்டாய்.
எதிர்வீட்டு ஏகாம்பரம்
மனைவிக்கும் தனக்குமாய்
அந்த வளையத்தைச்
சுருக்கிக் கொண்டவுடன்

"கொண்டவ தலையில
பூ சுமையும்
பெத்தவ தலையில
புல் சுமையும்
வச்ச பாவி... போறாம் பாரு"
எனப் பொருமிகிறாய்.

நானும் ஒரு
பர்வியாகவில்லை என்றா
ஏங்குகிறாய்?

என் வளையம்
ரொம்பப் பெரியது.
அதில்
நீ உண்டு, அண்ணி உண்டு
ஏகாம்பரம் உண்டு, அவன் தாயு
முண்டு
நம் ஊரே உண்டு.

ஊர் காத்த அய்யனார்
நீ சொன்ன கதைதான்.
எட்டடிக் குச்சுக்குள்
அடங்குமா அம்மா
உன் அய்யனார் சிலை?

●

அம்மா
நீயும் அப்பாவும் அண்ணனும்
என்மீது கொண்ட
அன்பைச் சொல்ல
'பாசம்'
என்ற சொல் உண்டு.

என்னுடைய அன்பை
எடுத்துச் சொல்ல - உன்
உரியில் இருக்கும் சொற்கள்
உதவாது.

உன் கண்ணீரைத் துடைக்க
உதவும் கைகள்
என் கண்ணீரைத் துடைக்க
உதவாது.

கோபப்படாதே அம்மா.
என் கண்ணீரை
இன்னும் நீ பார்த்ததேயில்லை.

●

நிதி. கோமேதகம்.


படிப்பகம்

www.padippakam.com



# கஜினி முகமது:
# கல்வெட்டில் உண்மைகள்
# பாடநூலின் புரட்டுகள்

பாபர் மசூதியை இடிக்கத் தனது ரதயாத்திரையை குஜராத்திலுள்ள சோம நாதபுரத்திலிருந்துதான் துவங்கினார் அத்வானி. அயோத்திக்கு பாபர்; சோம நாதபுரத்திற்கு கஜினி. அயோத்தியில் ராமர் கோயில் எதையும் பாபர் இடிக்க வில்லை என்பது பல வரலாற்று ஆசிரி யர்களாலும் தொல்பொருள் ஆய்வாளர் களாலும் தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டது.

ஆனால் சோமநாதபுரத்தின் விச யம் அப்படி அல்ல. சோமநாதபுரம் கோயிலை கஜினி முகமது கொள்ளை யிட்ட செய்தி நீண்ட நாட்களாகவே நமது வரலாற்றுப் பாட நூல்களில் இடம் பெற்று வருகிறது.

இந்தியாவில் இந்து - முசுலீம் முரண்பாட்டின் துவக்கமே கஜினியின் இந்தப் படையெடுப்புதான் என இன்று பாரதிய ஜனதா கும்பல் செய்து வரும் பிரச்சாரத்திற்கு உறுதியான அடித்த ளத்தை வழங்குகின்றன நமது பாடநூல் கள்.

அப்படியானால் கஜினி முகமது சோமநாதபுரத்தின் மீது படையெடுத்த தும் கொள்ளையடித்ததும் பொய்யா? இல்லை, மறுக்க முடியாத உண்மை.

ஆனால் கஜினி படையெடுத்தபோது சோமநாதபுரத்தில் வாழ்ந்துவந்த முசுலீம் களும் அவனை எதிர்த்துப் போரிட்டு மடிந்தார்கள் என்பதும், அதேபோல கஜினி முகமதுவின் தலைநகரமான கஜினியில் பெரும் செல்வந்தர்களாகப் பல இந்து வர்த்தகர்கள் இருந்தனர் என்பதும், 'இந்துக்' கோயிலைக் கொள்ளையடித்த அந்த 'இசுலாமிய' மன்னன் தனது நாட்டின் 'இந்து' வர்த்தகர்களைக் கொள்ளையடிக்கவில்லை என்பதும் நமது பாடநூல்கள் குறிப்பிடாத உண்மை.

கத்தியவாரை (குஜராத்) ஆண்டு கள் வந்த சோலங்கி மீது கஜினி முகமது படையெடுத்த அதே கால கட்டத்தில் தான், தெற்கே சோழ நாட்டிலிருந்து ராசேந்திர சோழன் சாளுக்கியர்கள் மீது படையெடுத்தான். இராசேந்திர சோழ னின் படையெடுப்பை இந்தியா மீதான படையெடுப்பென்றோ, இந்து மன்னர்க ளுக்கிடையிலான மோதல் என்றோ குறிப்பிடாத வரலாற்றுப் பாடநூல் கஜினி முகமது எனும் 'இசுலாமிய' மன் னன் 'இந்தியா' மீது படையெடுத்ததாகக் குறிப்பிடுவதை ஒப்பு நோக்க வேண்டும்.

ஒரு நாடு என்ற பொருளில் இந் தியா என்று நாம் இன்றைக்கு அழைக் கின்ற புவிப்பரப்பு சுமார் 50 ஆண்டுக ளுக்கு முன்னர் உருவானது. கஜினி முக மதுவின் காலத்திலோ, அதற்கு முன் னரோ இந்தப் புவிப்பரப்பு ஒரே ஆட்சி யின் கீழ் ஒரு நாடாக எப்போதும் இருந்த தில்லை.

ஏன், 1947 ஆகஸ்டு 15-ம் தேதி யன்று காஷ்மீரும், ஆந்திரத்தின் பெரும் பகுதியும், பல வடகிழக்கு மாநிலங்க ளும் இந்திய யூனியனில் இல்லை. எழுப துகளுக்கு முன்னர் சிக்கிம் இந்தியாவில் இல்லை. அவ்வாறிருக்க 20-ம் நூற்றாண் டில் உருவாகவிருக்கும் இந்தியா மீது 11-ம் நூற்றாண்டிலேயே கஜினி முகமது எப்படிப் படையெடுக்க முடியும்?

இவ்வாறு பேசுவதே தேசத் துரோ கம் என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் குமு றுவார்கள். அகண்ட பாரதத்திற்கு அவர் கள் வரைந்துள்ள எல்லைக் கோட்டின் படி ஆப்கானிஸ்தானமும் இந்தியாவில் அடக்கம். அந்தக் கணக்கின்படி பார்த் தால் இராசேந்திர சோழனைப் போல கஜினி முகமதுவும் ஒரு இந்தியன். ஒரு இந்தியன், எப்படி இந்தியாவின் மீது படையெடுக்க முடியும்?

இது வேடிக்கையான வாதமோ, குதர்க்கவாதமோ அல்ல. இந்து தேசியக் கண்ணோட்டத்திலிருந்து நமக்குக் கற் பிக்கப்படும் வரலாற்றை விஞ்ஞான பூர் வமாக ஆராய்ந்து புரிந்து கொள்ளும் முயற்சி.

பிரபல வரலாற்றாய்வாளர் ரோமில்லா தபார் பம்பாய் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு நிகழ்த்திய டி.டி. கோசாம்பி நினைவுச் சொற்பொழிவில் சோமநாதபுரம் படையெடுப்பு குறித்த புதிய வரலாற்றுத் தரவுகளை வெளியிட் டுள்ளார். 'செமினார்' - ஆங்கில மாத இதழில் வெளியான அந்தக் கட்டு ரையை ஆதாரமாகக் கொண்டு இக்கட் டுரை எழுதப்படுகிறது.

●○●

சோமநாதபுரம் - அரேபியர்களு டன் இருந்த கடல் வர்த்தகத் தொடர்பு காரணமாக செல்வச் செழிப்புடன் விளங் கிய துறைமுக நகரம். இந்த அராபிய வர்த்தகத் தொடர்பு பல நூற்றாண்டுகள் முந்தையது. அரேபிய வர்த்தகர்கள், மாலுமிகளில் பலர் இங்கேயே திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டு மேற்குக் கடற்கரை ஓரமாக நிரந்தரமாகவே தங்கி விட்டனர். கி.பி. 8, 9 நூற்றாண்டைச் சேர்ந்த ராட்டிரகூட ஆட்சியில் கடலோ ரப் பகுதிகளில் தாஜிக்கிஸ்தானைச் சேர்ந்த முசுலீம்கள் ஆளுநர்களாகக் கூடப் பணியாற்றியிருக்கின்றனர். அதே போல கஜினி நகரத்தில் இந்து வியாபாரி கள் செல்வாக்குடன் இருந்திருக்கின்ற னர்.

சோமநாதபுரம் கோயில் அத்தனை செல்வச் செழிப்புள்ளதாக விளங்கச் சில காரணங்கள் இருந்தன. கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் யாத்திரை வரி வசூ லிக்கப்பட்டது. (ஜஸியா எனும் யாத் திரை வரி முசுலீம் மன்னர்களால் இந்து யாத்ரீகர்களிடம் வசூலிக்கப்பட்டதாக மட்டுமே கூறுகிறது பாடநூல்) இதில் கிடைத்த பெரும் வருவாயைக் கொண்டு அரேபியக் குதிரை இறக்குமதி வியாபா ரத்தில் ஈடுபட்டிருந்தது கோயில் நிர்வா கம்.


படிப்பகம்

www.padippakam.com

கோயில் நிர்வாகத்திற்கும், சோலங்கி ஆட்சிக்கும் அன்றைக்குப் பெரும் சவாலாக இருந்தவர்கள் கோயிலுக்கு வரும் பக்தர்களைக் கொள்ளையடித்த குறுநில மன்னர்கள்தான். யாதவர்கள், சுடாசாமர்கள், அபிரர்கள் என்று அழைக்கப்பட்ட அந்தக் குறுநில மன்னர்கள் வர்த்தகர்களையும் பக்தர்களையும் வழிமறித்து அவர்கள் கொண்டுவரும் காணிக்கைகளை வழிப்பறி செய்தனர். இவர்களைச் சமாளிப்பதுதான் சோலங்கி அரசின் தலையாய பணியாக இருந்தது.

இந்தப் பின்புலத்தில் கி.பி. 1025-ம் ஆண்டு நடந்தது கஜினியின் படையெடுப்பு. அது குறித்த வெவ்வேறு வரலாற்று ஆதாரங்களை இனிக் காண்போம்.

**துருக்கிய - பாரசீகக் குறிப்புகள்:**

மன்னர்களின் வீரபராக்கிரமங்களை மிகைப்படுத்திக் கூறும் எல்லா இலக்கியங்களுக்கும் உள்ள தன்மை இவற்றிலும் உண்டு. கீழை இசுலாமிய உலகின் குறிப்பிடத்தக்க கவிஞரான பருக்கி சிஸ்தானி என்பவர் கஜினியின் படையெடுப்பைப் பற்றி விவரிக்கிறார்.

சிஸ்தானியின் கூற்றுப்படி சோமநாதபுரத்தில் கஜினியால் உடைக்கப்பட்ட சிலை இந்துக் கடவுள் அல்ல; இசுலாம் தோன்றுவதற்கு முன் அரேபியாவில் வழிபடப்பட்டு வந்த லாத், உஸ்ஸா, மானத் என்ற பெண் தெய்வங்களில் ஒன்றான மானத் என்ற பெண் கடவுளின் சிலை.

உருவ வழிபாட்டை எதிர்த்த முகமது நபி இச்சிலைகளை உடைத்தெறியுமாறு ஆணையிட்டதாகவும் மற்ற இரண்டு கடவுள்களின் சிலையும் உடைக்கப்பட்டு விட்டதாகவும், மானத்தின் சிலை மட்டும் குஜராத்திற்கு ரகசியமாகக் கடத்தி வரப்பட்டு விட்டதாகவும் கூறுகிறார் சிஸ்தானி.

''சு-மானத்' என்றால் ''மானத் கடவுளின் உறைவிடம்'' என்று பொருள். இந்தச் சிலையை உடைத்ததன் மூலம் நிறைவேற்றப்படாமலிருந்த ஒரு இசுலாமியக் கடமையை கஜினி நிறைவேற்றி விட்டார்'' என்று அவர் எழுதுகிறார்.

மன்னனைக் 'குளிப்பாட்டுவதற்கு' வழக்கமாக அரசவைப் புலவர்கள் புனையும் கதைதான் இது என்றும், பல்வேறு இசுலாமிய மன்னர்களைக் காட்டிலும் தன்னை ஒரு மதக்கடமையை நிறைவேற்றிய மாவீரனாகச் சித்தரித்துக் கொள்ள கஜினி செய்த முயற்சி என்றும் கூறி வரலாற்றாசிரியர்கள் இந்தக் கதையை நிராகரிக்கின்றனர்.

கஜினியின் அரசவையில் இருந்த அல் பரூனி எனும் அறிஞர் இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து கிதாப் உல் ஹிந்த் எனும் வரலாற்று நூலை எழுதியவர். அவர் இத்தகைய கட்டுக் கதைகள் எதையும் எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க சன்னி பிரிவு முசுலீமான கஜினி, ஷியா மற்றும் இசுமாயிலி பிரிவு முசுலீம்கள் 50,000 பேரை இசுலாமிய மார்க்கத்துக்கு விரோதமானவர்கள் என்று கூறிக் கொலை செய்தான் என்றும் துருக்கிய - பாரசீக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இன்னொரு சம்பவமும் நடந்துள்ளது. மூல்தான் நகரிலிருந்த இந்துக் கோயிலொன்றை இசுமாயிலி முசுலீம்கள் தாக்கியிருக்கின்றனர். அதற்குப் பதிலடியாக இசுமாயிலி முசுலீம்களைத் தாக்கியது மட்டுமின்றி அவர்களது மசூதியையும் இழுத்து மூடியிருக்கிறான் கஜினி.

சோமநாதபுரத்தின் மீதான தாக்குதல், ஷியா மற்றும் இசுமாயிலி பிரிவு முசுலீம்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றை மதக் கடமையை நிறைவேற்றும் செயல்களாக அன்று இசுலாமிய உலகத்திடம் (கலீபாவிடம்) கஜினி சித்தரித்திருக்கலாம். எனினும் அடிப்படை உண்மை அதுவல்ல.

இந்தியாவின் பல்வேறு அரசுகளுடன் நடைபெற்ற குதிரை வர்த்தகத்தில் அரேபியாவுடன் கஜினி (ஆப்கான்) போட்டியிட்டுக் கொண்டிருந்தது. சோமநாதபுரத்தின் போரா முஸ்லீம் மற்றும் இந்து வணிகர்கள் மூலமாகவும், சிந்து மாகாணத்தின் (மூல்தான்) இசுமாயிலி, ஷியா வியாபாரிகள் மூலமாகவும் நடைபெற்ற இந்த வர்த்தகத்தைத் தடுப்பதன் மூலம்தான் கஜினியின் வர்த்தகம் பெருகும் என்பது யதார்த்த நிலையாக இருந்தது.

வர்த்தகத்திற்கான யுத்தம் மதப் போர்வை போர்த்திக் கொண்டது இப்படித்தான் நடந்திருக்க வேண்டும்.

**அர்ச்சகர்களின் 'பெருந்தன்மை'**

**இந்திய மன்னர்களுடன் நடைபெற்ற குதிரை வர்த்தகம் அரபேியா, சிந்து பகுதிகளைச் சேர்ந்தஷியா, இசுமாயிலி பிரிவு முஸ்லீம் வியாபாரிகள் கையில் இருந்தது. இந்த வர்த்தக வழியைத் தடுத்து, ஆப்கான் மூலம் வர்த்தகம் செய்யவைப்பதன் மூலம் தனது அரசின் செல்வத்தைப் பெருக்குவதே கஜினி முகம்மதுவின் நோக்கம். வர்த்தகத்திற்கான யுத்தம் மதப் போர்வை அணிந்தது இப்படித்தான்.**

**அதேபோல கஜினி முகமது சோமநாதபுரத்தின்மீது படையெடுத்து 200 ஆண்டுகளுக்குள், அந்தக் கோயில் நிலத்தையே மசூதி கட்டுவதற்காக விற்றிருக்கிறார்கள் கோயில் அர்ச்சகர்கள். இவர்களும்குதிரை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தது தான் இந்தப்' பெருந்தன்மைக்கு' காரணமாக இருக்கும்.**

**சமண நூல்களின் குறிப்புகள்:**

இனி, அக்காலத்தில் நாடெங்கும் செல்வாக்குடன் திகழ்ந்த சமண மதத்தினரின் குறிப்புகளைக் காண்போம்.

கோயில்களை அழித்து முனிவர்களையும் பார்ப்பனர்களையும் துன்புறுத்துகின்ற ராட்சதர்களுக்கெதிராக சாளுக்கிய மன்னன் போர் தொடுத்ததை 12-ஆம் நூற்றாண்டின் சமண நூல் குறிப்பிடுகிறது.

ஆனால் ஒரு நூற்றாண்டுக்கு முன் நடந்த கஜினியின் படையெடுப்பு பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

இதே சாளுக்கிய மன்னன் காம்பே பகுதியில் முசுலீம்களுக்கு ஒரு மசூதி கட்டிக் கொடுத்திருக்கிறான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாளுக்கிய மன்னன் குமாரபாலன் என்பவன் சாகாவரம் பெற விரும்பிய கதையை இன்னொரு சமண நூல் கூறுகிறது:

சோமநாதபுரத்திலுள்ள மரத்தினாலான பாழடைந்த கோயிலை கற்கோயிலாக மாற்றிக் கட்டினால் சாகாவரம் பெறலாமென அவனது அமைச்சன் கூறிய யோசனையை மன்னன் அமல்படுத்துகிறான். சமண மதத்தைச் சார்ந்த அந்த அமைச்சன் தனது மதத்தின் வலிமையை மன்னனுக்குப் புரிய வைக்க சமண முனிவர் ஒருவரை அழைத்து வந்தான். சோமநாதபுரம் கோயிலுக்கு வந்த அந்த முனிவர் தனது தவ வலிமையினால் 'சிவபெருமானை' அழைத்தவுடனே சிவன் மன்னனுக்குக் காட்சியளித்தாராம். சிவனையே சொடுக்கு போட்டு வரவழைக்கும் அந்த முனிவரின் தவ வலிமையை வியந்த மன்னன், உடனே சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறினான் எனவும் அந்நூல் குறிப்பிடுகிறது.

கஜினி முகமதுவின் படையெடுப்புக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் எழுதப்பட்ட இந்நூலிலும் படையெடுப்பு பற்றி எந்தத் தகவலும் இல்லை.

11-ம் நூற்றாண்டில் (அதாவது கஜினி முகமதுவின் படையெடுப்பின் போது) வாழ்ந்த மால்வா அரசவையின் சமணக் கவிஞர் தனபாலன் என்பவர் சோமநாதபுரம் படையெடுப்பைக் குறிப்பிடுகிறார். ஆனால் சிலை உடைப்பு பற்றி ஏதும் இல்லை. மாறாக மகாவீரரின் சிலைகளை கஜினி முகமதுவால் எதுவும் செய்ய முடியவில்லை என்பதை விரிவாகக் கூறுவதன் மூலம் சைவத்தைக் காட்டி


படிப்பகம்

www.padippakam.com

லும் சமணத்தின் மேன்மையை வலியுறுத்துகிறார்.

சைவத்திற்கு எதிராகக் கடுமையாக மோதிக் கொண்டிருந்த சமணர்கள், ''தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத சிவபெருமானைப்'' பற்றி எழுதாமல் இருக்க வேண்டிய அவசியம் என்ன?

**சோமநாதபுரத்தின் சமஸ்கிருதக் கல்வெட்டுக்கள்:**

12, 13-ம் நூற்றாண்டில் சமஸ்கிருதக் கல்வெட்டுகள், கோயிலை உள்ளூர் குறுநில மன்னர்கள் கொள்ளையிட்டதைப் பற்றியே கூறுகின்றன.

ஆனால் 100 ஆண்டுகளுக்கு முந்தைய கஜினி முகமதுவின் படையெடுப்பைப் பற்றி ஒரு கல்வெட்டும் இல்லை.

கல்வெட்டைக் காண்பவர்கள் ''சிவனுக்கே இந்தக் கதியா'' என்று நம்பிக்கையிழந்து விடுவார்கள் என்ற சங்கடமா? அப்படியானால் உள்ளூர் மன்னர்கள் கோயிலைத் தாக்கியதை மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும்? அல்லது கோயிலைக் கொள்ளையடிப்பது என்பது அடிக்கடி நடக்கக்கூடிய சாதாரண விசயமாக இருந்ததா? - என்ற பல கேள்விகளை இக்கல்வெட்டுகள் கிளப்புகின்றன.

1264-ஆம் ஆண்டின் இன்னொரு கோயில் கல்வெட்டு மிக முக்கியமானது. சமஸ்கிருதத்திலும் அரபிய மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு, ஹார்மூஸ் நகரைச் சேர்ந்த ஒரு முசுலீம் வியாபாரிக்கு மசூதி கட்டுவதற்காக சோமநாதபுரத்திலேயே நிலம் விற்பனை செய்யப்பட்டது பற்றியதாகும்.

கோஜா நூருதீன் பெரூஸ் என்ற வியாபாரிக்கு ஸ்ரீசாதா என்ற உள்ளூர் மன்னன் அனுமதியுடன் செய்த இந்த நில விற்பனைக்கு இரண்டு உள்ளூராட்சி அமைப்புகளும் அங்கீகாரம் அளித்துள்ளன.

சோமநாதபுரம் கோயிலின் அருச்சகர் வீரபத்ரனின் தலைமையில் வர்த்தகர்கள், அதிகாரிகள், உள்ளூர்ப் பிரமுகர்கள் அடங்கிய 'பஞ்சகுலா' என்ற பஞ்சாயத்து ஒரு உள்ளூர் அமைப்பு.

கப்பல் முதலாளிகள், கைவினைஞர்கள், மாலுமிகள், மதகுருமார்கள் ஆகியோரடங்கிய 'ஜமாதா' என்ற ஜமாத் இரண்டாவது அமைப்பு. இந்த ஜமாத்தின் உறுப்பினர்களாக வாணிபர்கள், கொத்தனர்கள், முசல்மான் குதிரை லாயக்காரர்கள் ஆகியோரும் அவர்களது சாதியின் பெயரால் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் இசுலாத்திற்கு மாறிய உள்ளூர் சேவைச் சாதியினராக இருக்கக்கூடும்.

மசூதிக்கான நிலம் யார் யாரிடமிருந்தெல்லாம் விலைக்கு வாங்கப்பட்டது என்ற பட்டியல் தெளிவாக உள்ளது. அதில் பெரும்பகுதி நிலம் சோமநாதபுரம் கோயிலுக்குச் சொந்தமானது என்பதும், அதை விற்பனை செய்தவர் கோயிலின் தலைமை அர்ச்சகரான பார்ப்பனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தக் கல்வெட்டையும் பரிசீலிக்கும்போது, எவ்வித நிர்பந்தமுமின்றி மிகச் சுமுகமாகவே இந்த விற்பனை நடந்துள்ளதெனத் தெரிகிறது.

கஜினி முகமதுவின் படையெடுப்பு நடைபெற்று சுமார் இருநூறே ஆண்டுகளில் அந்தக் கோயில் நிலத்தையே மசூதிக்கு விற்க அர்ச்சகர்களும், 'இந்து' வியாபாரிகளும் எப்படிச் சம்மதித்தனர்? 1000 ஆண்டுகளாக இந்தியா முழுவதிலுமுள்ள இந்துக்களின் நினைவில் கல்வெட்டாகப் பதிந்து அவமான உணர்ச்சியை ஏற்படுத்தும் சம்பவம் என்று பாரதீய ஜனதா கூறுகிறதே. அந்த கஜினியின் படையெடுப்பை அதே சோமநாதபுரத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் மறந்தது எப்படி? அதுவும் இருநூறே ஆண்டுகளில்!

> **பாடநூற் புரட்டு!**
>
> மெட்ரிகுலேசன் பாடத்திட்டத்தின் வரலாற்றுப் பாடநூலிலிருந்து சில வரிகளைக் கீழே தருகிறோம். ரோமிலா தபாரின் ஆய்வுடன் இதனைப் பொருத்திப் பார்க்கவும்.
>
> ''கஜினி முகமது ஒரு முஸ்லீம் வெறியன். சோமநாதபுரத்தில் அவன் சிவபெருமான் சிலையைத் துண்டு துண்டாக உடைத்தான்; குவியல் குவியலாக வைரங்களையும் நகைகளையும் கொள்ளையடித்தான். ஏராளமான பேரைப் படுகொலை செய்தான்.''
>
> ''கஜினி முகமதுவின் படையெடுப்பின் விளைவாக, வளமான பஞ்சாப், முஸ்லீம்களின் கைக்குப் போய்விட்டது. இந்திய நாட்டின் பொருளாதார, இராணுவ வல்லமைக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.''
>
> 'மதவெறியன்', பஞ்சாப் போனகதை இவையெல்லாம் பிரிஷ்டாவின் கட்டுக் கதையையும், முன்ஷியின் நாவலையும் வைத்து எழுதப்பட்டவை. இந்த 'வரலாறை'ப் படித்த படிப்பாளிகள் மதவெறிக்கு ஆளாவதில் என்ன வியப்பு?

ஞாபக மறதியா? அல்லது பலநூறு படையெடுப்புகளில் அதுவும் ஒன்று என்பதால் நினைவில் வைத்துக் கொள்ளும் அளவு முக்கியமானதல்ல என்பதாலா?

அல்லது, தங்களுடன் ''சுமுகமான வர்த்தக உறவு கொண்டிருந்த அராபியர்கள் வேறு, ஆக்கிரமித்த துருக்கியர்கள் வேறு; இருவரும் இசுலாமிய மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இவர்களிருவரையும் 'முசல்மான்கள்' என்று ஒரே மாதிரியாகக் கருத முடியாது'' என எண்ணினார்களா - இந்தக் காரணம்தான் அடிப்படையானதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, குதிரை வர்த்தகத்திற்குப் பெயர்போன ஹார்மஸ் நகர முசுலீம் வியாபாரிக்குத்தான் நிலம் விற்கப்பட்டிருக்கிறது. எனவே வர்த்தக நலன் இதில் பெரும்பங்கு ஆற்றியிருக்கக் கூடும். கோயில் நிர்வாகிகள் கோயில் பணத்தில் குதிரை வர்த்தகம் செய்து கணிசமாக லாபம் ஈட்டியிருக்கக் கூடும் என்பதும் இந்தப் 'பெருந்தன்மைக்கு'க் காரணமாக இருந்திருக்கலாம்.

சோமநாதபுரத்திலேயே காணப்படும் 15-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டொன்று இவை அனைத்தையும் புரிந்து கொள்வதற்கான திறவுகோலாகப் பயன்படுகிறது.

சமஸ்கிருத மொழியில் உள்ள அக்கல்வெட்டு ''பிஸ்மில்லா ரஹ்மானி ரஹீம்'' என்ற இசுலாமிய வாழ்த்துச் சொல்லுடன் தொடங்குகிறது. ''போரா பரீத்'' என்பவருடைய அராபிய வம்சாவளியை விவரமாகக் கூறி துருக்கியர்களால் (கஜினி) சோமநாதபுரம் தாக்கப்பட்டபோது அதை எதிர்த்து உள்ளூர் மன்னன் பிரம்ம தேவன் சார்பாக போரா பரீத் போரிட்டு மடிந்ததாகவும், அவரது நினைவாக அந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையெடுப்புக்கு ஆளான சோமநாதபுரம் நகரைச் சேர்ந்தவர்களே கஜினியின் படையெடுப்பைப் பற்றி அப்போதும், அதையடுத்த சில நூற்றாண்டுகளிலும் எத்தகைய கருத்தும் கண்ணோட்டமும் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் கண்டோம். அப்படியானால் இந்த **''ஆயிரம் ஆண்டு அவமானம்''** என்ற கதை எப்போது உருவானது? இந்தக் கதையின் முதல் ஆசிரியர்கள் வெள்ளையர்கள்.

**பிரிட்டிஷ் காமன்ஸ் அவை விவாதம்:**

''சோமநாதபுரத்தின் மீது படையெடுத்த கஜினி முகமது அந்தக் கோயிலின் சந்தனமரக் கதவுகளை கொண்டு சென்றுவிட்டான். ஆப்கானிஸ்தானத்தில் உள்ள பிரிட்டிஷ் ராணுவம் கஜினிக்குச் சென்று அங்கிருந்து அந்தக் கதவைக் கொண்டு வந்து இந்துக்களிடம் ஒப்படைக்க


படிப்பகம்

www.padippakam.com

வேண்டும்'' என்று 1842-இல் அறிவித்தார் லார்டு எல்லன்பரோ.

(1857-இல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போருக்கு 15 ஆண்டுகள் முன்னர்தான் இந்த விவகாரம் தொடங்குகிறது என்பதையும், இந்து - முசுலீம் மன்னர்களையும் மக்களையும் பிளவுபடுத்துவது அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனியின் வாழ்வுக்கே அவசியமானதாக இருந்தது என்பதையும் வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.)

ஆப்கானை வெல்ல முடியாத பிரிட்டன் இக்கதவுகளைக் கொண்டு வருவதன் மூலம் ஆப்கான் மீதான தனது மேலாண்மையைக் காட்டலாம்; அதே நேரத்தில் இந்துக்களையும் கவர முடியும் என்பது இந்நடவடிக்கையின் நோக்கம்.

இந்நடவடிக்கையை ஆட்சேபித்த காமன்ஸ் அவையின் எதிர்த் தரப்பினர், ''இது முசுலீம்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதில் முடியும்; மேலும் லிங்க வழிபாடு போன்ற காட்டுமிராண்டித்தனமான நம்பிக்கைகளுக்கு நாம் துணை போவதாக அமையும்'' என்று கூறினர்.

இந்த எதிர்ப்பை முறியடிக்க எல்லன் பரோவின் ஆதரவாளர்கள் கீழ்க் கண்டாவறு வாதிட்டார்கள்:

''முசுலீம் மன்னர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட அந்த நாடு, அந்தத் துன்புறுத்தும் நினைவுகளால் ஆயிரம் ஆண்டுகளாக அவதிப்பட்டு வருகிறது. இந்துஸ்தானத்தின் மீதான மிக மோசமான ஆக்கிரமிப்பின் சின்னமாக அந்தச் சந்தனக் கதவுகள் இந்துக்களின் நினைவில் பதிந்திருக்கின்றன. எனவே இந்நடவடிக்கை அவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருக்கும்'' என்றனர்.

கஜினியின் படையெடுப்பு - கொள்ளைக்கு ஆதாரமாக அவர்கள் காட்டிய நூல் பிரிஷ்டா என்ற பாரசீகக் கவிஞன் 17-ம் நூற்றாண்டில் எழுதியது. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது.

11-ஆம் நூற்றாண்டில் சிஸ்தானி எழுதியதைக் காட்டிலும் பிரிஷ்டாவின் கட்டுக்கதை மிகக் கவர்ச்சிகரமானது. சோமநாதபுரத்தில் மிகப் பிரம்மாண்டமான கடவுள் சிலை இருந்ததாகவும், அதன் வயிற்றைத் தன்னுடைய வாளால் கஜினி முகமது கிழித்தவுடன் அதிலிருந்து தங்கமும் நகையும் கொட்டத் தொடங்கியதாகவும் புராணப் புளுகுகள் கணக்கில் அளக்கிறார் பிரிஷ்டா.

ஒருவழியாக இந்த ''வரலாற்று ஆதாரத்தை'' வைத்துக் கொண்டு கஜினியிலிருந்து இரண்டு கதவுகளைத் தூக்கிக் கொண்டு வந்தது பிரிட்டிஷ் ராணுவம். வந்தபின் பார்த்தால் அவை எகிப்தியக் கதவுகள். அதற்கும் சோமநாதபுரத்திற்கும் சம்பந்தமில்லை. எனவே அவை ஆக்ரா கோட்டையில் வைக்கப்பட்டன. 'இந்துக்களின் நினைவில் பதிந்த அந்த சந்தனக் கதவுகளை' இப்போது கரையான்கள் தின்று கொண்டிருக்கும்.

**காங்கிரசும் கஜினி முகமதுவும்:**

இந்திய தேசிய விடுதலை இயக்கம் மறைமுகமாக முன்வைத்த இந்து தேசிய அரசியல் சோமநாதபுரம் விவகாரத்தைப் பெரிதாக்குவதில் முக்கிய பங்கு வகித்தது.

குஜராத்தைச் சேர்ந்த கே.எம். முன்ஷி சோமநாதபுரம் கோயிலை திரும்பக் கட்டுவதை தேசிய இயக்கத்தின் கடமையாக முன்னிறுத்தினார். இவர் கல்கி பாணியிலான 'வரலாற்று' நாவல்கள் எழுதிக் கொண்டிருந்தவர். முசுலீம் எதிர்ப்பு இந்து தேசியத்தை பிரச்சாரம் செய்த பக்கிம் சந்திரரின் ஆனந்தமடம் நாவலைப் படித்து, அதன் தாக்கத்தில் அதே பாணியில் ''ஜெய சோமநாதா'' எனும் நாவலை இவர் 1927-இல் எழுதி வெளியிட்டார். ''சோமநாதா - அழிவில்லா ஆலயம்'' என்ற இவரது இன்னொரு நூல் 1843-இல் பிரிட்டிஷ் காமன்ஸ் அவையில் நடைபெற்ற விவாதக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளது.

''இசுலாமிய ஆக்கிரமிப்புக்கு முந்தைய ஆரியப் பெருமிதத்தை மீட்பதே நமது லட்சியம்'' என்று பகிரங்கமாகப் பேசி வந்த முன்ஷி மத்திய அமைச்சரும் ஆனார். ஆட்சிக்கு வந்தவுடனே முதல் வேலையாக இந்திய அரசாங்கம் சோமநாதபுரம் கோயிலைக் கட்டி 1951-இல் ஜனாதிபதி ராசேந்திர பிரசாத்தை வைத்துக் குடமுழுக்கு நடத்தியது.

''இந்திய அரசாங்கம் இதுவரை செய்த, செய்து கொண்டிருக்கிற அனைத்துப் பணிகளைக் காட்டிலும் இந்தக் கோயிலைக் கட்டியதுதான் முக்கியமானது; ஏனென்றால் இது ஒட்டுமொத்த இந்தியாவையும் மனம் குளிரச் செய்யும்'' என்றார் அமைச்சர் முன்ஷி.

இப்படியாக ஒரு வரலாற்றுப் புரட்டு மதரீதியாகப் புனிதப்படுத்தப்பட்டதுடன், ''அரசு அங்கீகாரம் பெற்றது'' என்ற முத்திரையும் அதன்மீது இடப்பட்டு விட்டது.

**மன்னனின் 'பெருந்தன்மை'**

கஜினி முகமதுவால் தோற்கடிக்கப்பட்ட ஆனந்த பாலன் எனும் மன்னன் கஜினி முகமதுவுக்கு எழுதிய ஒரு கடிதத்தை அல்பருனி தனது நூலில் மேற்கோள் காட்டுகிறார்.

''உங்களுக்கெதிராகத் துருக்கியர்கள் கலகம் செய்வதாக அறிந்தேன். நீங்கள் விரும்பினால் 500 குதிரைப் படையினர், 10,000 காலாட்படையினர், 100 யானைகளுடன் நான் உங்கள் உதவிக்கு வருகிறேன். அல்லது இரண்டு பங்குப் படையுடன் என் மகனை அனுப்புகிறேன். ஏனென்றால் நான் உங்களால் தோற்கடிக்கப்பட்டவன்; நீங்கள் வேறொருவனால் தோற்கடிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.''

முஸ்லீம் மக்களை 'பாபரின் வாரிசுகள்' என்று கூறும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஆனந்தபாலனின் வாரிசுகள் யார் என்று நமக்கு அடையாளம் காட்டுவார்களா?

● ○ ●

ஏராளமான நூல்கள் மற்றும் கல்வெட்டுகளை ஆதாரம் காட்டி இந்த ஆய்வுரையை நிகழ்த்தியிருக்கிறார் ரோமில்லா தபார். ஆனால் எந்தக் கோயிலை பாதுகாப்பதற்காக ஒரு முசுலீம் உயிர் துறந்தாரெனக் கல்வெட்டு இருக்கிறதோ அதே கோயிலிலிருந்து முசுலீம் மக்களுக்கெதிரான நாடு தழுவிய கலவரத்தைத் துவக்கி வைக்கிறார் அத்வானி.

இத்தகைய வரலாற்றுப் புரட்டு என்பது இந்துமத வெறியர்களால் மட்டும் செய்யப்படுவதல்ல. தத்தம் அரசியல் தேவைக்கு ஏற்ப இசுலாமிய, கிறித்தவ மதவெறியர்களும், இன வெறியர்களும், சாதி வெறியர்களும் இதையே தான் செய்கிறார்கள்.

கட்டபொம்மன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மன்னன் அல்ல - கொள்ளைக் காரத் தெலுங்கன் என்கிறது ஒரு தமிழின வெறிப் பத்திரிகை; ஏதோ ஒரு குறுநில மன்னனாக இருந்திருக்கக் கூடிய பெரும் பிடுகு முத்தரையர் சாதி அரசியலின் தேவை காரணமாக சென்னை நகர முச்சந்தியில் உருவிய வாளுடன் நிறுத்தி வைக்கப்படுகிறார்; கான்சாகிபுவா மருதநாயகமா என்ற தகராறு கமலஹாசனுடைய படத்தின் வசூலுக்கு வலிமை சேர்க்கிறது.

வரலாற்றின் பெயரால் சாதி, மத, இனவாதிகள் நடத்தும் இந்த மோதலை முறியடிக்க வேண்டுமானால் நமக்குத் தேவை வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம். அந்தக் கண்ணோட்டமிருந்தால் நாம் கஜினியையும் புரிந்து கொள்ளலாம்; கார்கிலையும் புரிந்து கொள்ளலாம்.

— அஜித்


படிப்பகம்

www.padippakam.com



ஜெசிகா லால்

# தலை நகரம்

## பகலில் அரிதாரம் | இரவில் நிர்வாணம்

தில்லியின் சீமைச்சாராய விருந்தொன்றில் ஜெசிகா லால் என்ற பறிமாறும் பணிப் பெண்ணை மனுசர்மா என்ற இளைஞன் போதை வெறியில் சுட்டுக் கொன்றான். கொலை நடந்தபோது மனு சர்மாவின் நண்பர்களான மூன்று மேட்டுக்குடி இளைஞர்கள் அவனுடன் இருந்தார்கள். இந்தக் கேளிக்கை விருந்தை ஏற்பாடு செய்த பீனாரமணி என்ற நடுத்தர வயதுப் பெண்மணியும் அங்கேதான் இருந்தாள்.

கொலை நடந்த நகரம் தலைநகரம். திரௌபதியைத் தருமன் பணயப் பொருளாக வைத்துச் சதுரங்கம் ஆடிய காலத்தில் அதன் பெயர் இந்திரப் பிரஸ்தம். பின்னர் அதே சதுரங்கக் கட்டத்தில் காய்களுக்குப் பதிலாக அடிமைப் பெண்களை நகர்த்திய முகலாயர் காலத்தில் அந்நகரத்தின் பெயர் தில்லி. இன்று புது தில்லி.

தனித்தனிக் கட்டிடங்களில், தனித்தனி அலுவலக வளாகங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை போன்று நடித்து வந்த பகல்நேரத் தில்லி, இரவில் தான் நிர்வாண நிலை எய்துகிறது. வணிகம் - அரசியல் - இராணுவம் - நீதித்துறை - அயலுறவு - பத்திரிகை இன்னபிற துறைகளுக்கிடையிலான உறவுகளைப் பகல் நேரத்தில் புரிந்து கொள்ள முடியாத பாமரர்கள் ஒரேயொரு இரவுநேர விருந்தைக் கண்டால் போதும் - புரிந்து கொள்வார்கள்.

இந்திய மக்களின் தலைவிதியை நிர்ணயம் செய்கின்ற அத்தகையதொரு இரவு விருந்தில்தான் ஜெசிகாவின் தலைவிதியும் நிர்ணயம் செய்யப்பட்டது.

விருந்தளித்த பீனா ரமணி, கலந்து கொண்ட மனு சர்மா, பணியாற்றிய ஜெசிகா லால் மூவரின் வாழ்க்கையைப் பரிசீலித்தாலே போதும் - நாம் அறிந்திராத அந்தத் 'தில்லியை' அறிந்து கொள்ள முடியும்.

ஜெசிகாலால் - சம்பவம் நடைபெற்ற அன்று வயிற்றுக்கு மேல் சுருட்டி விடப்பட்ட மேல் சட்டையுடனும், குட்டைக் கால் சட்டையுடனும் நள்ளிரவு வரை மது பரிமாறிக் கொண்டிருந்தார். இரவு 2 மணிக்கு இன்னொரு கோப்பை மதுகேட்டான் மனுசர்மா. அவள் இல்லை என்றாள். ''மது இல்லையென்றால் உன்னை அருந்தட்டுமா'' என்றான். கொஞ்சம் வாக்குவாதம். பிறகு துப்பாக்கி வெடித்தது.

அரைகுறை உடையோடு, சாராயக் கடை ஒன்றின் இரவு பரிசாரராக, அவள் பணியாற்ற வேண்டிய அவசியம் என்ன? ஜெசிகா ஒரு விளம்பர நடிகை. அதற்கும் மேல் சம்பாதிப்பதற்காக மது பரிமாறும் வேலையைப் பகுதி நேரமாக மேற்கொண்டார். விருந்திற்கு வரும் மேலிடத்து மனிதர்களுடன் அறிமுகம் கிடைப்பது வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உதவும் என்பது அவளது கணக்கு.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஜெசிகா விளம்பர நடிகையானதும், தில்லி மேட்டுக்குடியின் நாகரீக ஆடம்பர வாழ்க்கையைத் தெரிந்து கொண்டார். பொய்யை மெய்யாக்கும் விளம்பரத் தொழிலின் நடிகை வசதியான மேட்டுக்குடி வாழ்க்கையால் கவரப்பட்டதில் முரணில்லை. அதனால்தான் பல கனவுகளில் திளைத்தவர், அற்ப ஆயுளில் போய்விட்டார் என்று வருத்தப்படுகிறது அத்தகைய கனவுகளையே விற்பனை செய்துவரும் பத்திரிகை இந்தியா டுடே.

ஆனால் ஜெசிகாவின் கனவுகளை ஒரு துப்பாக்கியால் குடித்த மனுசர்மாவின் நிலைமை வேறு. அந்தக் கனவுகளையெல்லாம் ஏற்கனவே நனவில் அனுபவித்து வந்தவன். என்ன, சற்று எல்லை மீறிப் போய்விட்டான் அவ்வளவுதான்!

அவன், முன்னாள் ஜனாதிபதி சர்மாவின் நெருங்கிய உறவினன், நரசிம்மராவ் ஆட்சியில் மந்திரியாக இருந்த வினோத் சர்மாவின் மகன், புகழ்பெற்ற வட இந்திய ஆங்கிலக் கான்வென்டு - கல்லூரிகளில் படித்தவன், கல்லூரி நாட்களில் தினம் ஒரு பெண்ணுடன் பென்ஸ் காரில் சுற்றியவன், குருசேத்திரத்திற்கு அருகிலுள்ள குடும்ப சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர், வார விடுமுறைகளில் தில்லியின் கேளிக்கைத் தலங்களில் குடியும், கூத்துமாய்க் கழிப்பவன், எங்கு சென்றாலும் சுற்றிவரும் பாதுகாவலர்களுடனும், கைத்துப்பாக்கியுடனும் விஜயம் செய்பவன்- இவையே மனுசர்மாவின் வாடிக்கையான முகங்கள்.

பணமும், அதிகாரமும் சரிவிகிதத்தில் கலந்து உருவான திமிரின் பௌதீகப் பொருளே மனுசர்மா. பொது இடங்களில் சிறு தடை வந்தாலே அவனது துப்பாக்கி வானைப் பார்த்து சீறும் - அப்போது ஒலிக்கும் அவனது புகழ்பெற்ற வாடிக்கையான முழக்கம் ''நான் ஜனாதிபதியின் சொந்தக்காரன் தெரியுமா, தொலைத்து விடுவேன்!''

இன்னும் அவனைப் பற்றித் தெரிய வேண்டுமா? அவனது சர்க்கரை ஆலைக்குச் செல்லுங்கள். அவனால் பணம் கொடுக்காமல் பட்டை நாமம் போடப்பட்ட கரும்பு விவசாயிகளைக் கேளுங்கள். 'ஐயா சாமி பணம் எப்பக் கிடைக்கும்' என்று பணிவுடன் கேட்ட குற்றத்திற்காக சித்திரவதை செய்யப்பட்ட அனுபவத்தைக் கண்ணீர் மல்கக் கூறுவார்கள்.

இந்தக் கிரிமினல் பொறுக்கியின் குடி கூத்துக் களப்பணிகளுக்குத் தோள் கொடுத்த நண்பர்கள் மூவர். டோனி என்ற அம்ரீந்தர் சிங், கோகோ - கோலாவை பாட்டிலில் அடைக்கும் தில்லி தொழிற்சாலையின் பொது மேலாளர். அவனுடன் பணியாற்றுபவன் அலோக் கன்னா. கோலாவின் உலகக் கோப்பைக் கிரிக்கெட் விளம்பர வாசகம் 'ரெப்ரஷ் ஹோ ஜா.' அந்தக் குதூகலத்தை வாழ்க்கையில் கடைபிடித்த இருவரும், கோக்கின் பாட்டில் தயாரிப்பில் மட்டுமல்ல, பண்பாட்டுத் தயாரிப்பிலும் விசுவாசமாக நடந்து கொண்ட உண்மை



படிப்பகம்

www.padippakam.com

ஊழியர்கள். இருவரும் எம்.பி.ஏ. (மேலாண்மை நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம்) படித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னே குப்பனும் சுப்பனுமா 'கோக்கில்' வேலை பார்க்க முடியும்! மூன்றாவது நட்புக் கேடியின் பெயர் விகாஸ் யாதவ். இவனது தந்தை ராஜ்ய சபா உறுப்பினராகவும், ரவுடியாகவும் இருந்து பிரபலமானவர். தனயனது சிறப்புக்குத் தந்தையின் பட்டமே போதும்.

●○●

பீனா ரமணி, மேட்டுக்குடி விருந்துகளுக்கு ஒரு தேவதை. ஒரே நாளில் மூன்று விருந்துகளுக்குக் கூட அயராமல் செல்பவரென்று, நண்பர்கள் பாராட்டுகின்றனர். மட்டுமல்ல, விருந்துகளில் உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும், மலர்விப்பவரும் கூட. எனில் அவர் யார், தொழில் என்ன, விருந்துகளின் நோக்கம் என்ன?

அவர் 'சோசியலைட்ஸ்' என்றழைக்கப்படும் ஆடம்பர - நாகரீக - மேட்டுக்குடி சமூகத்தின் ஒரு பிரதிநிதி. அவரது தொழில், அரசியல், வியாபார, சினிமா, நிழல் உலக வேலைகளை முடித்துக் கொடுக்கும் 'தரகர்' வேலை. அதாவது 'பொம்பளை மாமா'. விருந்துகள் அவரது தொழிலுக்காக உருவாக்கப்படும் பூலோக சொர்க்கங்கள். ''புதுப்புது ஆட்களைச் சந்தித்து எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்பதில் அம்மா கவனமாக இருப்பார்'' என்று ஒரு பத்திரிகையில் எழுதினாள் மகள் மாலினி. எல்லையை விரிவுபடுத்தும் 'தொழிலில்' தற்போது மகளும் தாயால் பயிற்றுவிக்கப்படுகிறாள்.

முன்பு தில்லி வாழ் மேட்டுக்குடியினருக்கு அழகான நடன விருந்து நிகழ்ச்சிகள் குறைவாக இருப்பதைக் கண்டு பீனா மிகவும் வருத்தப்பட்டார். அதன் பொருட்டு குதுப்மினாருக்கு அருகிலுள்ள தன் பண்ணை வீடான டாமரின்ட் கோர்ட்டிலேயே தனது புகழ் பெற்ற 'வியாழக்கிழமை விருந்துக் - கேளிக்கை'யை ஆரம்பித்தார். உயர் வகை மதுக்களை கொள்முதல் செய்து, மது பரிமாற அழகிகளை ஏற்பாடு செய்து, ஒவ்வொரு விருந்தின் போதும் பிரபல நட்சத்திர விருந்தினர்களை வரவழைத்து - தூள் பரத்தினார்.

இவரது நட்சத்திர வாடிக்கையாளர்களின் பட்டியலே அவரது செல்வாக்கைப் பறைசாற்றும். சில ஆண்டுகளுக்கு முன் நடந்த இவரது இரண்டாவது திருமணத்தில் வந்தவர்களை வரவேற்ற ரொமேஷ் சர்மா, (தாவுத் இப்ராஹிமின் டெல்லித் தளபதி - தற்போது சிறையில்) ஆடை வடிவமைப்பாளர் ரோஹித் பால், கலைப்பொருள் விற்பனையாளர் ரிது வாலியா, இந்தியத் தொழிலதிபர்கள் கவுன்சிலின் தலைவர் ராஜேஷ் ஷா, எஸ்கார்ட்சின் நந்தா, அப்பல்லோ டயரின் நீரஜ் கன்வர், பாம்பே டையிங் ஜெய் வாடியா, பா.ஜ.க. வெளியுறவு அமைச்சர் வசுந்தரா ராஜே சிந்தியா, ஹாலிவுட் நடிகர் ஸ்டீவன் செகால், போலீஸ் கமிஷ்னர் தட்லால், சந்திரா சுவாமி என்று பட்டியல் நீளுகிறது.

●○●

ஓட்டுக் கட்சிகள், அதிகார வர்க்கம், தரகு முதலாளிகள் ஆகியோரின் குலக் கொழுந்துகள் தொடுத்திருக்கும் ஆளும் வர்க்கப் பயங்கரவாதம் இதுதான். அந்தப் பட்டியலின் சமீபகால சம்பவங்களைப் பாருங்கள்.

ஹரியானா உள்துறை மந்திரி மகன் மனோஜ் குமார், 98-இல் மன்ஜித் சிங் என்பவரைக் கொன்ற வழக்கு தற்போது நடந்து வருகிறது. பஞ்சாப் மந்திரி பகவான் தாஸ் மகன் கமல் தீப் அரோரா - ஒரு கடைக்காரரைக் கடத்தியிருக்கிறான். முன்னாள் முதல்வர் பீந்த் சிங்கின் பேரன் குருகிரத் சிங், பிரெஞ்சு சுற்றுலாப் பயணி காதியாலைக் கற்பழித்தான். காங்கிரசின் இளைஞர் தலைவன் சுசீல் சர்மா மனைவியைத் தந்தூரி அடுப்பில் வறுத்துக் கொன்றான். முதல்வர் பதவி துறந்து மாநகரப் பேருந்தில் சென்ற எளிமையான பா.ஜ.க. தலைவர் சாகிப் சிங்கின் பேரன்கள் ஒரு தில்லிக் கடைக்காரரைக் கொன்றனர். இன்னும் ஓம் பிரகாஷ் சௌதாலா, முலாயம் சிங் யாதவ், கல்ராஜ் மிஸ்ரா ஆகியோரின் வாரிசுகள் கற்பழித்த கணக்குகளும், புகார்களும் ஏராளம்.

அதிகாரத்தின் சிகரத்திலிருக்கும் இவர்களிடம் விரும்பிய ஒன்று கிடைக்காது என்பது அகராதியில் கிடையாது. மட்டுமல்ல, இவர்களின் ஒவ்வொரு குடும்பமும் பல தொழில் நடத்தும் கோடீசுவரக் குடும்பங்களாகும். உதாரணத்திற்கு மனுசர்மாவின் அப்பா வினோத் சர்மாவின் சொத்துக்களை எண்ணுங்கள். சண்டிகார் - மணாலி - ராய்ப்சால் நட்சத்திர விடுதிகள், ஒரு கட்டுமானக் கம்பெனி, ஆயுர்வேதக் கல்லூரி, 2 சர்க்கரை ஆலைகள் - அப்புறம் மந்திரி, ஜனாதிபதி வகையில் சேர்ந்தவை என்று கணக்குப் போட முடியாத அளவுக்கு கருப்புக் கணக்காக இருக்கிறது.

இந்தியாவின் ஏனைய பகுதிகளை விட, இந்தி பேசும் மாநிலங்களில் தான் உடன்கட்டை, குழந்தை மணம், வரதட்சணைக் கொலை, தாழ்த்தப்பட்டோர் படுகொலை உள்ளிட்ட நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைகள் அதிகம். இப்பகுதிகளிலிருந்து உருவாகும் இச்சுரண்டல் கூட்டம், அரசியல் அதிகாரத்தைச் சுவைக்கும்போது கள் குடித்த குரங்காகிறது. நம்மூர் மு.க. அழகிரி, சுதாகரனின் ஆடுகளம் தமிழ்நாடு மட்டும்தான். இவர்களுக்கோ இந்தியா முழுவதும் சொந்தம். இந்தி மாநிலங்களின் அரசியல் அதிகாரத்திலிருந்து வரும் திமிரும், திமிராடும் இந்தியக் களமும் சுலபமாக சாத்தியமாகிறது.

மனு சர்மா



மனு சர்மாவிடம் துப்பாக்கி இருப்பதும், கெட்ட சகவாசம் இருப்பதும் தெரியாதே என்று முதலையாய் அழுகிறார் வினோத் சர்மா. ஆனால் இந்த யோக்கியர் 2 லட்சம் மதிப்புள்ள ஸ்காட்டிஷ் கைத் துப்பாக்கியைச் சுங்கத்துறையிடமிருந்து ரூ. 9 ஆயிரத்திற்கு அமுக்கினார். காரணம் மந்திரிப் பதவி என்றால் மனு சர்மா மட்டும் துப்பாக்கி வைத்திருப்பது தவறா? தில்லியில் மட்டும் 55,000 லைசன்ஸ் பெற்ற துப்பாக்கிகளும், 1 லட்சம் லைசன்ஸ் பெறாமலும் உள்ளனவாம். உழைக்கும் மக்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது என்பதற்கு ஆயிரத்தெட்டு கட்டுப்பாடு போட்டு லைசென்ஸ் முறையை வைத்திருக்கிறார்கள். இந்த விதிகள் பணக்காரக் கேடிகளுக்கு மட்டும் பொருந்துவதில்லை. மேலும் பலமுறை துப்பாக்கியைப் பிரயோகித்த மனுசர்மாவின் லைசன்ஸ் ரத்து செய்யப்படவில்லை. ஒரு கொலைக்குப் பிறகே ரத்து செய்யப்பட்டது. இனி ஆயுதத்தினால் வரும் சிக்கல்கள் வடகிழக்கிலோ, தண்டகாரண்யாவிலோ இருந்தல்ல, அவர்களின் பண்ணை வீடுகளிலிருந்தே சீறிப் பாயும்.

எப்படி, இவர்களது ஊழல் வழக்குகள் புனிதமான இந்திய அரசியல் சட்டத்தால் நமத்துப் போனதோ, கிரிமினல் வழக்குகளும் அப்படித்தான். எடுத்துக்காட்டாக, கொலை நடந்த நாளில் மனுசர்மாவுடன் கூத்தடித்த விகாஸ் யாதவை மட்டும் போலீஸ் கைது செய்ய முடியவில்லை. கடைசியில் தம்பி, மணிப்பூர் சென்று முன் பிணை வாங்கி வந்து,



படிப்பகம்

www.padippakam.com

டெல்லியில் சரணடைந்து இப்போது காரில் சுற்றுகிறான். போலீஸ் வழக்கம் போல அசடு வழிகிறது. தில்லிக் குற்றவாளி ஒருவன் வடகிழக்கு மாநிலம் சென்று முன்பிணை வாங்குகிறான் என்றால், இவர்களது அதிகார பலம் - செல்வாக்கு வலைப்பின்னல் என்ன என்று யோசித்து தலை சுற்றுகிறது. மேலும் இதே கேடி தனது 14 வயதில் (91 -ஆம் ஆண்டு) சக மாணவனைக் கொன்று, இதே மாதிரி 'ஜாமின் டெக்னிக்கில்' வெளிவந்தவனாம். வழக்கும் அம்பேல்.



• 'எல்லைகளை விரிவுபடுத்தும்' பீனா • ரமணி, மகள் மாலினியுடன் •

இப்படி நிலப்பிரபுத்துவத் திமிர், தரகு முதலாளிப் பணம், உலகமயமாக்கத்தின் நுகர்வு வெறி மூன்றும் இணைந்து ஆட்டம் போடும், அவர்களின் வாரிசுகள் ஒருபுறமிருக்கட்டும். இவர்களின் வன்முறையை விட இவர்களின் சமூக, அரசியல், வணிக நடவடிக்கைகளும், ஆடம்பர கேளிக்கை விருந்துகளும் சங்கமிக்கும் அன்றாட வாழ்க்கை எப்படி இயங்குகிறது என்பதே முக்கியமானது. நாம் புரிந்து கொள்ள வேண்டியது, அதைத்தான்.

அவர்களைப் பொறுத்தவரை விருந்துகள் என்பது ஒரு சமூக அங்கீகாரம். அது ஆளும் வர்க்கத்தின் அனைத்துப் பிரிவினரையும் ஒரு ரம்மியமான சூழ்நிலையில் சங்கமிக்க வைக்கிறது. அந்த ரம்மியத்தின் மதிப்பு பல லட்சங்கள். ஒவ்வொரு தடவையும் மத்திய கால பாரசீகம், மொகலாயர் காலம், விக்டோரியா பாணி, பாலிவுட் பாணி, அஜந்தா ஓவியப் பாணி என்ற விதவிதமான கருக்களுக்கேற்ப விருந்து சூழ்நிலை உருவாக்கப்படும். அலங்கரிக்கப்படும்.

அதற்கு 5 லட்சம், மதுவுக்கு 1 லட்சம், அழகுப் பொருட்கள், இடத்திற்கு 1 லட்சம், உணவுக்கு 1 லட்சம் என்று விருந்துகளின் தரத்திற்கேற்ப லட்சங்கள் அதிகரிக்கும். விருந்தினர்களும் விருந்து கோரும் தரத்துடன் வருவார்கள். லண்டன் ஷூக்கள், இத்தாலிய சட்டைகள், ஜெர்மானியப் பைகள், ஜெனிவா வாட்ச்கள், தென் ஆப்பிரிக்க வைரங்கள் என்று அவர்களை அலங்கரிக்கும் பொருட்களெல்லாம் சாதாரணம். இன்னும் சிங்கப்பூரிலிருந்து இசைக் குழுவும், எகிப்திலிருந்து சமையல்காரர்களும் கூட சிறப்பு விருந்துக்கு வருவார்கள்.

அவர்களின் திருமணம், பிறந்த நாள், மணநாள், வெளிநாடு போனது - வந்தது, நிறுவனத் திறப்பு - மூடல், கருமாதி உட்பட ஏதாவது சாக்கிட்டு விருந்து நடக்கும். இரும்பு, சர்க்கரை, சாராயம், பத்திரிகை, மருந்து, சினிமா இன்னபிற தொழில்களின் சக்கரவர்த்திகள் வருவார்கள். விருந்துகளில் ஒவ்வொரு துறையினருக்கும் ஏராளமான தொடர்புகள் கிடைக்கும். ஒப்பந்தங்கள் முடிவாகும். பல பிரச்சினைகளுக்கு வழி கிடைக்கும். அதனால்தான் விருந்துகளுக்கு அழைக்கப்படும் தகுதியைப் பெறுவது என்பது அவர்களைப் பொறுத்தவரை வாழ்வா, சாவா பிரச்சினை. டெல்லியில் பழச்சாறு விற்ற குல்ஷன் குமார் ஆடியோ உலகின் அதிபதியாக மாறியதும், குமாஸ்தாவான அம்பானி இந்தியாவின் முதல் செல்வந்தர் நிலை அடைந்ததும் - விருந்துகளின் மகிமை தான். அதாவது அவர்களின் குறுக்கு வழிக்கும், கருப்புப் பணத்திற்கும், அரசியல் வணிக தரகு வேலைக்கும் - விருந்தின் பயன்பாடு அவசியம்.

சந்திரசாமியின் அன்னியச் செலவாணி ஊழலுக்கு உடந்தையாக இருந்தது முதல், இந்தி நடிகை ரேகாவை டெல்லி தொழிலதிபருக்கு மணமுடித்துக் கொடுத்தது வரை பீனா ரமணியின் பணிகள் பல. இவரது விருந்துக்கு வந்தவர்கள்தான் அமெரிக்க ஹாலிவுட் நடிகர்கள் ரிச்சர்டு கேர், ஸ்டீவன் செகல் போன்றோர். இவர்கள் தான் திபெத்துக்கும், தலாய்வாமாவுக்கும் ஆதரவாகப் பிரச்சாரம் செய்பவர்கள். அமெரிக்க வெளியுறவுக் கொள்கையும் இதுதான். இவர்களுக்கும், பீனா ரமணிக்கும், என்ன உறவு?

இந்திய விருந்துகளின் தன்மையை விட உலக விருந்துகளின் வீரியம் அதிகம். இந்தியாவின் சீன விரோதப் போக்கு, தலாய்லாமா - திபெத்திய அகதிகளுக்கு செயல்படும் உதவி போன்றவற்றை வைத்து அத்தகைய அமெரிக்க விருந்தினர்கள் வருகிறார்கள். பயன்படுத்துகிறார்கள். பீனாவுக்கும் பயன்படுகிறார்கள். இந்தியா போஃபர்ஸ் பீரங்கியை வாங்க வேண்டுமா, ஜெர்மன் நீர்மூழ்கியை வாங்கவேண்டுமா என்பதெல்லாம் இங்கு தான் முடிவாகின்றன.

ஒவ்வொரு நாடும் உலக அளவில் தனக்குப் பிரச்சாரம் செய்ய இத்தகைய குடி - கூத்து வழிகளையே கையாளுகின்றன. ஐ.நா. சபையிலும், அமெரிக்க காங்கிரசிலும் தனக்கு நல்ல பெயர் பிரச்சாரம் செய்ய இந்திய அரசு சில அமெரிக்க தரகுக் கம்பெனிகளை பல கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துள்ளன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படி குடி - கூத்து செலவுகள் செய்தே அனைத்து நாடுகளும் தங்கள் அயல் உறவுகளைக் கையாளுகின்றன. குறிப்பாக வாஜ்பாயி 77-இல் வெளியுறவு அமைச்சராக இருக்கும்போது இவ்வேலை செய்வதில் புகழ் பெற்றார்.

தாவூத்தின் தில்லித் தளபதி ரொமேஷ் சர்மாவின் கட்டிடத்தில்தான் சேஷனது தேசபக்தி அலுவலகம் செயல்பட்டது. சேஷனது மனைவி ஜெயலலிதாவுக்காக வழக்காடியவர். சேஷன் சங்கர மடத்தின் முக்கிய விருந்தினர் சங்கர, சாய்பாபா மடங்களுக்கு வருமானவரிச் சோதனை, அந்நியச் செலவாணிக் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. ஜெயாவுக்காக சுப்பிரமணிய சாமி நடத்திய 'சோனியா தேநீர் விருந்து' சமீபத்திய பிரபலம். வளைகுடா ஆயுதத் தரகன் கசோகி, சந்திராசாமி, சுப்பரமணிய சாமி, சந்திரசேகர் அனைவரும் நெருங்கிய நண்பர்கள். சாமி, சேகரைத் தமிழகத்தில் தூக்கிப் பிடிப்பவர் துக்ளக் சோ. ஆம். அவர்களது சமூக இயக்கம் இப்படித்தான். அதில் அரசியல் தொடங்கி நிழல் உலகம் வரை அவர்களுக்கு விருந்துகள் ஒரு சூப்பர் மார்க்கெட்.

இப்படி அவர்கள் தங்கள் பணத்தை, நட்பை, உறவை, தகவலை, சிக்கலை, வழியை, ஆடம்பரத்தை, திமிரை, எப்போதாவது தோட்டாக்களையும் பரிமாறிக் கொள்கிறார்கள். தொழிலில் தோற்பவர்கள் அங்கே மதிக்கப்படுவதில்லை. அவர்களுக்குக் கருணையும் இல்லை. வென்றவர்களுக்குத் தான் கிராக்கி அதிகம். ஜெசிகா லால், பீனா ரமணி, மனுசர்மா மூவரும் இவ்வுலகைச் சேர்ந்தவர்கள். ஜெசிகா கொல்லப்பட்டார். பீனா தொழிலைத் தொடர்கிறார். மனு, தான் ஒரு அப்பாவி என்கிறான். விரைவில் வெளியே வருவான்.

• வேல்ராசன்



படிப்பகம்

www.padippakam.com

● சுவர்ப் பிரச்சாரத் தடை - அன்று தமிழ் உரிமைக்காகத் தண்டவாளத்தில் தலை வைத்த கருணாநிதி இன்று சட்டத்தை வளைத்து கருத்துரிமையின் கழுத்தை நெரிப்பது - அவரின் வர்க்க இருப்பை தெளிவாகக் காட்டுகிறது.

படையப்பா படத்தின் கதை, பாத்திரங்கள் மீதான விமர்சனம்தான் இருக்கும் என இதழைப் புரட்டினோம். ஆனால் நிழல் படையப்பாவின் நிஜ முகத்தை அடையாளம் காட்டியது சரியான கோணம்.

சில ரசிகர்கள் மட்டும் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். ''படத்தில் வரும் லாபம் அனைத்தையும் படத்தில் நடித்தவர்களுக்கே ரஜினி தர சொல்லிவிட்டார் தெரியுமா? ''ஜெயலலிதாவை எதிர்ப்பதால்தானே ரஜினியை எதிர்க்கிறீர்கள்: எங்கே சுதாகரன் அடித்த கொள்ளையை இப்படி பகிரங்கமாகப் பேசு பார்ப்போம்'' - மற்றும் பெண் தோழர் ஒருவரிடம் காசு கொடுத்து இதழ் வாங்கிய ரசிகர், பின் அதைக் கிழித்து பேருந்து நிலையத்தில் போட்டு விட்டுப் போய்விட்டார்.

பிரெக்டின் நாடகங்கள் குறித்தும், அதில் காணப்படும் தூரப்படுத்தும் வடிவம், பிரச்சினையை அன்றைய ஐரோப்பா - இன்றைய இந்திய சூழ்நிலையுடன் ஒப்பிட்டு புரிந்து கொள்ள முடிந்தது.

பிஞ்சுக் குமரிகள் கட்டுரை தன்னார்வக் குழுக்கள் மற்றும் முதலாளித்துவ சீமான்கள், குழந்தைத் தொழிலாளர் குறித்து போலிக் கண்ணீர் விடுவதை திரைகிழித்துக் காண்பித்தது.

''பார்ப்பான் என்றால் இளக்காரமா உங்களுக்கு, SC எல்லாம் தவறே செய்வதில்லையா, நாங்க நல்லாப் படிச்சாலும் கவர்ன்மெண்ட்ல வேலை தர மாட்டேங்கறான்: ஆனா படிக்கத் தெரியாத SC மேல போறான். அதை முதல்ல நோட்டிசுல போடுங்க. அப்புறம் நிதி தர்றேன்'' - என்று ஒரு முறை பிரச்சாரத்தின்போது எதிர்த்த பார்ப்பன வக்கீலின் கேள்விகளுக்கு பதிலளிப்பது போல் இருந்தது 'ஆதாரம்' சிறுகதை. சாதி இழிவின் எல்லையைத் தொட்டுக் காட்டியது.

— சுரேஷ் மற்றும் வாசகர்கள்,
திருச்சி.

● 'இந்து மதவெறியை எதிர்த்து போராடுகிறோம் என்ற வகையில் உற்சாகமாய் இருந்தது. இந்து முன்னணியின் அராஜகங்களை எதிர்த்து துண்டுப் பிரசுரம், நேரடிப் போராட்டம் மூலமாக அவர்கள் பகுதியிலேயே தொடர்ந்து செயல்படுகிறோம். இன்று ம.க.இ.க. தான் மாற்று என்பதை மக்கள் மனதில் ஓரளவு ஏற்படுத்தியுள்ளோம். அந்த நம்பிக்கையின் விளைவாகத்தான் DYFI போன்ற அமைப்புக்களிலிருந்து இளைஞர்கள் நம்மிடம் பேசுகிறார்கள்.




# வாசகர் ★ கடிதம் ★

அதே சமயம் இந்து மதவெறியர்களுடன் மோதல் என்பது குறைந்தது 10 நாட்களுக்கு ஒருமுறையாவது நடக்கிறது. நம்மிடம் பத்திரிகை, ஒலிப் பேழை வாங்கியவர்களையெல்லாம் அவர்கள் தேடிப்பிடித்து மிரட்டுகிறார்கள். பொறுப்புக்களிலிருக்கும் தோழர்களைப் பட்டியல் வைத்து தேடுகிறார்கள். அத்தகைய சம்பவங்களை எல்லாம் 10 பக்கங்களுக்கு மேல் எழுதலாம். அவர்களை எந்த அரங்கிலும் சந்திக்கும் வண்ணம் கோவையை நமது கோட்டையாக மாற்றுவோம்.

— ச. நந்தகோபால்
கோயம்புத்தூர்

● 'ரஜினியைப் பற்றி சிலர் மட்டும் பேசாதே என்பதும் பலர் பேசுங்கள் என்பதும் பேருந்து விற்பனை அனுபவமாக உள்ளது. வயதான பெண்கள், சிறுவர்களும் கூட ஆர்வமாக வாங்கினர்.

ம.க.இ.க. பாடலைத் திருடி - திருத்திப் பாடுவதை சி.பி.எம். அணிகள் பலர் தவறு என்று ஏற்றனர். சிலர் மட்டும் 'இதைப்போல் ,பெரிதாக எழுதி விட்டீர்களே' என்று குறைபட்டனர்.

— புதிய கலாச்சாரம்
வாசகர் வட்டம்,
சென்னை.

● நமக்கு கிடைப்பது போல் அனைவருக்கும் கிடைப்பதே பொதுவுடமை என்றுதான் நினைத்தேன். ஆனால் அனைவருக்கும் கிடைக்காத போது உனக்கு மட்டும் எடுத்துக் கொள்ளும் உரிமையும் பொதுவுடமையில் இல்லை, என்பதை ப்ரெக்ட் பற்றிய கட்டுரையும், அவரின் கவிதையும் புரிய வைத்தது.

— மீனா,
பெண்கள் விடுதலை முன்னணி,
சென்னை

16.5.99 அன்று விழுப்புரத்தில், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முப்பெரும் விழா நடைபெற்றது. சிறப்புரையாற்றிய அமைச்சர் பொன்முடி, ''நிகழ்ச்சி அழைப்பிதழின் விளம்பரத்தில் காணப்படும் கம்ப்யூட்டர் ஜாதகம் கணிக்கப்படும் என்ற பிற்போக்கு கலாச்சாரக் கருத்து முற்போக்கு சிந்தனையாளர் மத்தியில் நுழையலாமா'' என்று ஆதங்கப்பட்டார்.

சங்கத்தின் சென்னை மாவட்டச் செயலர் ராஜேந்திரன் பேசும்போது 'நிதி நெருக்கடியால் அவ்விளம்பரத்தை சேர்த்தோம்' எனச் சமாளித்தார். சங்கத்தின் மாநிலத் தலைவர் விக்கிரமன் பேசும்போது, ''எழுத்தாளர்களை முற்போக்கு பிற்போக்கு என பேதம் பிரிக்காமல், தமிழ் எழுத்தாளர்கள் என்றுதான் பார்க்க வேண்டும்'' என்றார்.

திரைப்படப் பாடலாசிரியர் அறிவுமதி கவிதை அரங்கில் இது குறித்துப் பேசும்போது, ''ஐயா கலைமாமணி விக்கிரமன் அவர்களே! இளைஞர்களுக்கு சரியானதைச் சொல்லிக் கொடுங்கள் - முற்போக்கு, பிற்போக்கு வித்தியாசம் இல்லையென்றால் இன்குலாப்பும், சோவும் ஒன்றா? இதையே 2000 ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள், நீங்களும் செய்ய வேண்டாம்'' என்று வேண்டுகோள் விடுத்தார். பின்னர், சென்ற 'புதிய கலாச்சாரம்' இதழில் வந்த 'வாஜ்பாயி' பாடலைப் பாடிக் காட்டி, ''இதுதான் முற்போக்கு, இதுதான் வளர்ந்து வருகிறது, வளரவும் வேண்டும், இதை இளைஞர்களுக்கும், மக்களுக்கும் தெளிவாக சொல்லுங்கள்'' என்று முடித்தார்.

— கே. பாண்டியன்
பு.க. முகவர், விழுப்புரம்.

www.padippakam.com

# மனித நாகரிகமும் மண்புழு நாகரிகமும்

கம்யூனிசத்தின் தோல்வியை மிகக் குதூலமாகக் கொண்டாடும் முதலாளித்துவ எழுத்தாளர்கள் கூட ரசியாவிலும் சீனாவிலும் மக்களுக்கு உணவு, உடை, வீடு, சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை என்றோ, அதனால்தான் மக்கள் சோசலிசத்தைக் கைகழுவி விட்டார்கள் என்றோ கூறுவதில்லை.

''வெறும் அடிப்படைத் தேவைகளைக் கொண்டு மட்டும் திருப்தியடைவதற்கு மனிதன் என்ன மிருகமா? அமெரிக்கா, ஐரோப்பாவைப் பாருங்கள்..! விதவிதமான உணவு வகைகள், அன்றாடம் மாறும் ரசனைக்கேற்ற உடைகள், புதுப்புது வடிவிலான கட்டிடங்கள், திரைப்படங்கள், கேளிக்கைகள், மது பானங்கள், குளிர்பானங்கள், விதவித மான நுகர் பொருட்கள்... என்று வாழ்க்கைத்தரம் பெரிதும் ''முன்னேறி'' விட்டது. ரசியா, சீனாவில் இத்தகைய ''முன்னேற்றம்'' இல்லை.''

''மனிதனின் விதவிதமான தேவைகளை எல்லாம் நிறைவு செய்கின்ற, அங்கீகரிக்கின்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைப் பற்றி சீன, ரசிய மக்களுக்கு எதுவும் தெரியாது. அது அவர்களுக்குத் தெரிய வரும்போது அங்கே சோசலிசம் தானே வீழ்ந்துவிடும்'' - என்பதுதான் முதலாளித்துவ எழுத்தாளர்களின் முக்கியமான பிரச்சாரமாக இருந்தது.

இன்று சீனாவிலும் ரசியாவிலும் எங்கு திரும்பினாலும் பெப்சி, கோக், சோனி, மிட்சுபிஷி, போர்டு, டொயோடா ஆகியவற்றுடன் புதிதாகக் கஞ்சித் தொட்டிகள், நடைபாதை வாசிகள், வேலையில்லாதவர்கள், விலைமாதர்கள், கொள்ளைக்காரர்கள், மஃபியா கும்பல்கள் ஆகியவையும் — அமெரிக்காவைப் போன்றே — உருவாகிவிட்டன.

இந்தத் தற்காலிக வெற்றியின் காரணமாகவே முதலாளித்துவம் நியாயமானதாகிவிட முடியாது; ஒழுக்கமானதாகிவிட முடியாது.

''உலக வாணிபம் அநேகமாக முழுமையாக உற்பத்தியின் தேவைகளைச் சுற்றித்தான் நடக்கிறதேயல்லாமல் தனிநபர் நுகர்வுக்குரிய தேவைகளைச் சுற்றியல்ல'' - என்று 'தேவை'கள் உருவாக்கப்படும் ரகசியத்தை உடைத்த மார்க்ஸ், நுகர்பவனுடைய மதிப்பீடு அவனது செல்வத்தையும், தேவையையும் சார்ந்திருக்கிறது என்றார்:

''சல்லாத்துணி வாங்குகிற வைப்பாட்டியும் சரி, (அதே அளவு காசில்) உருளைக்கிழங்கு வாங்குகிற தொழிலாளியும் சரி இருவரும் தத்தம் மதிப்பீட்டைப் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களது மதிப்பீடுகளில் உள்ள வேறுபாட்டை அவர்கள் உலகத்தில் வகிக்கும் நிலைகளில் உள்ள வேறுபாடு விளக்குகிறது; இந்த நிலைகளும் சமுதாய அமைப்பின் விளைபொருளே ஆகும்'' (மார்க்ஸ் - மெய்யறிவின் வறுமை)

''சல்லாத்துணியே முன்னேற்றத்தின் சின்னம்'' என்று கருதும் மேற்குலகைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் 1960-களின் துவக்கத்தில் மாவோவின் சீனத்திற்குச் சென்றார்.

ஆல்பர்டோ மொராவியா என்ற அந்த எழுத்தாளர் மார்க்சிய வாதியோ கம்யூனிச ஆதரவாளரோ அல்ல. ''சிவப்பு நூலும் சீனப் பெருஞ்சுவரும்'' என்ற அவரது நூலின் முன்னுரையிலிருந்து சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகிறோம்.

சமுதாயப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியைத் தீர்மானிக்கும் பொதுவுடைமைச் சமூகம்; ஒரு பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் ஊடாக அத்தகையதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் கம்யூனிஸ்டு அரசியல்; தேவை - சுதந்திரம் இவற்றுக்கிடையிலான உறவு பற்றிய மார்க்சியக் கண்ணோட்டம் - இவை அவரது முன்னுரையில் இல்லை.

ஆனால், மேற்குலக மேட்டுக்குடியின் வாழ்க்கையும் வசதிகளும்தான் முன்னேற்றத்தின் அளவுகோல். என்று கருதும் மாயையை இந்த முன்னுரை கிழித்தெறிகிறது. நுகர்வியம் (consumerism) எனும் பண்பாட்டின் விகாரமான முகத்தை அச்சுறுத்தும் விதத்தில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறது. இந்த அறிமுகம் புதிய சமூகத்தின் 'தேவை' குறித்து நம்மைச் சிந்திக்கத் தூண்டும்.

ஒரு உரையால் வடிவில் அமைந்துள்ளது இந்த முன்னுரை.

● ○ ●

ஆ: அப்போ சீனாவுக்குப் போயிருந்தீர்களோ?

அ: ஆமாம், சீனாவுக்குச் சென்றிருந்தேன்.

ஆ: சீனாவில் உங்களைப் பெரிதும் கவர்ந்த விஷயம் எது?

அ: வறுமை.

ஆ: என்னது, வறுமையா?

அ: ஆமாம். வறுமைதான்.

ஆ: சீனமக்கள் அவ்வளவு ஏழைகளோ?

அ: மேற்கத்திய நாடுகளின் அளவுகோலில் பார்த்தால், ரொம்பவும் ஏழைதான்.

ஆ: அந்த வறுமையைப் பார்த்தபோது உங்களுக்கு என்ன தோன்றியது?

அ: ஒருவித நிம்மதி.

ஆ: நிம்மதியா? அடக்கடவுளே, எனக்குத் தெரிந்த வரை வறுமை, ஏழ்மை என்று சொன்னால் சீரழிவும், விரக்தியும் தான். அதெப்படி உங்களுக்கு மட்டும் நிம்மதியாக இருந்தது?

அ: ஆமாம். நிம்மதியாகத்தான் இருந்தது. நான் அப்படித்தான் உணர்ந்தேன். தனது சொந்த மன உணர்வுகளைக் கூட ஒரு மனிதனால் புரிந்து கொள்ள முடியாதா என்ன? சீனாவில் இருந்த வரை எனக்கு அப்படித் தான் இருந்தது. அதெப்படி என்று நீங்கள் கேட்கலாம். அதைப்பற்றி அப்போது நான் யோசிக்கவில்லை. இப்போது வேண்டுமானால் கொஞ்சம் யோசித்துப் பதில் சொல்ல முயற்சி செய்கிறேன்.

ஆ: மேற்கத்திய நாடுகளில் வறுமை நிம்மதி உணர்வைத் தோற்றுவிப்பதில்லை. மாறாக, அடக்கப்படும் உணர்வையும் அதற்கு எதிராக் கலக உணர்வையும்தான், தோற்றுவிக்கிறது. உதாரணத்திற்கு அமெரிக்க நீக்ரோக்களைப் பாருங்கள். கோபம் வந்தால் அவர்களின் சேரியையே எரித்து விடுவார்கள்.

அ: அய்யா, அமெரிக்காவிலே ஏழைகளும் இருக்கிறார்கள், பணக்காரர்களும் இருக்கிறார்கள். ஏழைகள் ஏழைகளாகவே இருக்கக் காரணம், பணக்காரர்கள். பணக்காரர்கள் பணக்காரர்களாகவே இருக்கக் காரணம், ஏழைகள். ஆனால் சீனாவிலோ ஏழைகள் மட்டுமே இருக்கிறார்கள்.

ஆ: ஓ, சீனாவில் எல்லோருமே ஏழைகளா? அப்படி நான் யோசிக்கவில்லை.

அ: ஆமாம், சீனாவில் எல்லோருமே ஏழைகள் தான். அவர்களை ஏழைகள் என்று பெயரிட்டு அழைப்பது பொருத்தமாகவும் இல்லை. வேறு ஏதாவது தான் பெயரிட வேண்டும்.

ஆ: எடுத்துக்காட்டாக, ஏதாவது வார்த்தை



படிப்பகம்

www.padippakam.com

சொல்லுங்களேன்.

அ: என்னால் உதாரணமெல்லாம் சொல்ல முடியவில்லை. பணக்காரனோடு ஒப்பிடாமல் ஒரு ஏழையை, அவனது சொந்த நிலைமையை வைத்துக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு இதுவரை வார்த்தை எதுவும் உருவாகவில்லை.

ஆ: அப்படியானால் என்னதான் அந்த சீனத்து வறுமை?

அ: அது செல்வமில்லாத வறுமை. சரியாகச் சொன்னால், மனிதனின் இயல்பான நிலை அதுதான்.

ஆ: ஆக உங்களைப் பொறுத்தவரை பணக்காரனாக இருப்பது என்பது மனிதனின் இயல்பான நிலை அல்ல; அசாதாரணமான நிலைமை என்கிறீர்கள்.

அ: அசாதாரணமாக இருப்பதாலேயே அது மனிதத் தன்மை அற்றதாகவும் இருக்கிறது.

ஆ: மனிதத் தன்மையற்ற குணம் என்றால்... என்னதான் அது?

அ: தேவையற்றவைகளுக்கெல்லாம் அவசியத்தன்மையும், செயல்பாடும் கற்பிப்பதுதான் இந்த மனிதத் தன்மையற்ற குணம்.

புதிதாக ஒன்றை, தேவையில்லாத ஒரு பொருளைக் கண்டுபிடித்து, உருவாக்கி அதன் மூலம் பணக்காரனாகிவிட விரும்பும் ஒரு ஒரு நபர் இருக்கிறன். ''நடக்கும் போதே இசை மீட்டும் செருப்பு'' என்று ஒரு பொருளை அவன் புதிதாக உருவாக்குகிறான். இதையே பெரும் அளவில் உற்பத்தி செய்து மக்களிடம் தள்ளிவிட விரும்புகிறான். இதற்கு அவன் என்ன செய்வான் சொல்லுங்கள்!

ஆ: தெரியவில்லை. விளம்பரம் செய்வான்.

அ: அதேதான். விளம்பரம் செய்வான்; கிராக்கியை உருவாக்குவான். அதாவது 'இசை மீட்டும் செருப்பு' என்ற இந்தப் பொருள் விற்பனைக்கு வருவதற்கு முன்னால் இருந்தேயிராத ஒரு கிராக்கியைச் செயற்கையாக உருவாக்குவான்.

''உனக்குத் தேவையில்லாத பொருளை நான் உனக்கு விற்கிறேன்'' என்று எந்த உற்பத்தியாளனுமே சொல்ல மாட்டான். ''நான் விற்கிற இந்தப் பொருள் இல்லாமல் நீங்கள் வாழவே முடியாது'' என்றுதான் எப்போதுமே சொல்வான்.

'தேவையற்ற' ஒரு பொருள் 'தேவையாக' மாறுகிறதே, இந்த உருமாற்றம்தான் நுகர்பவன் என்பவனை உருவாக்குகிறது.

ஆ: நுகர்பவன் எங்குதான் இல்லை? சீனர்களையே எடுத்துக் கொள்வோமே, அங்கே ஒருசோடி கால்சட்டை வாங்கும் சீனன் நுகர்பவன்



இல்லையா?

அ: இல்லை. அவன் நுகர்பவன் அல்ல. தனக்குத் தேவையான உடையை மட்டுமே அவன் வாங்குகிறான். உடலை மறைக்க ஒரு உடை அணிபவன் தான் மனிதன் என்று ஒரு பொதுக் கருத்து அவனிடம் இருக்கிறதல்லவா, அந்த அளவுக்குத் தேவையான ஒரு உடை. ஆனால் நுகர்பவன் என்பவனோ ஒரு சாக்கடை.

ஆ: என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?

அ: நுகர்வோன் எனப்படுபவன் ஒரு சாக்கடை என்கிறேன். வாயும், குடலும், மலத்துவாரமும் மட்டுமே கொண்ட ஒரு உயிரினம் என்கிறேன். இத்தகைய உயிரினங்கள் வேறொன்றும் செய்வதில்லை; தின்னும், செரிக்கும், கழிக்கும்.

ஆ: அப்படிப் பார்த்தால் கால்சட்டை வாங்கும் சீன நுகர்வோனும் ஒரு சாக்கடை தானே?

அ: இல்லை. ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. பொருளை நுகர்வதனால் மட்டுமே நுகர்வோனை நான் சாக்கடை என்று அழைக்கவில்லை; நுகர்வதுதான் தன்னுடைய பணி என்று சில உயிரினங்களைப் போல் அவனும் கருதுகிறான். அதனால்தான் அவன் சாக்கடை. ஆனால், பாவம், ஒரு சீனன் அப்படி இல்லை. தான் அம்மணமாக இருக்கக் கூடாது என்ற காரணத்திற்காக மட்டுமே அவன் உடை அணிகிறான்.

சுருக்கமாகச் சொன்னால் நுகர்பவன் என்பவனோ எதை வேண்டுமானாலும் நுகரத் தயாராக இருக்கிறான் - ஒரு மண்புழுவைப் போல. அது தன் குடல் வழியாக எப்படிப்பட்ட மண்ணையும் அனுப்பத் தயாராக இருக்கிறது.

ஆ: சே, நுகர்பவன் புழுவைப் போன்றவன் என்றா சொல்கிறீர்கள்?

அ: சாக்கடைக் குழாய், புழு என்றெல்லாம் நான் சொல்வது உங்களுக்கு சங்கடமாக இருந்தால், வேறு விதமாகச் சொல்கிறேன்.

உற்பத்திக்கும் நுகர்தலுக்கும் இடையே விடுபட்ட ஓர் இணைப்பே நுகர்பவன். அது மனித இணைப்பு — இருந்தாலும் அது வெறும் இணைப்புதான். அதற்கு மேல் ஒன்றுமில்லை.

அதேபோல, நுகர்தலுக்கும், உற்பத்திக்கும் உள்ள இணைப்புதான் உற்பத்தியாளன். உற்பத்தியாளனும், நுகர்பவனும் ஒரே மண்புழுவின் முன் பகுதியும், பின் பகுதியுமாக அமைகிறார்கள்.

www.padippakam.com

ஆ: உற்பத்தியாளனும், நுகர்பவனும் தவிர வேறு ஒன்றுமே இல்லையா? ஒரு மருத்துவன், ஒரு கலைஞன், ஒரு தொழிலாளி, ஒரு விவசாயி என்று சொல்ல எதுவுமேயில்லையா? அவர்கள் வெறுமனே உற்பத்தியாளனும், நுகர்பவனும் மட்டும் தானா?

அ: 'உற்பத்தி', 'நுகர்தல்' என்ற சொற்கள் எல்லா விதமான பொருள்களின் உற்பத்தியையும் அவற்றின் விற்பனையையும் சம்பந்தப்படுத்தியதுதான் - அது மிக மிக உன்னதமானதாக, அதி அற்புதமானதாக இருந்தாலும் சரி.

ஆ: அப்படி என்றால் மேற்கத்திய மனிதன், உற்பத்தி செய்வதையும் நுகர்தலையும் தவிர வேறெதையும் சிந்திக்காதவன் என்கிறீர்களோ?

அ: ஆமாம், அப்படித்தான்.

ஆ: அவன் தன்னைப் பற்றிக் கூடச் சிந்திப்பதில்லையோ?

அ: 'தான்' என்று சொல்கிறீர்களே, அப்படி ஒன்று இல்லை. உற்பத்தி செய்யும் அல்லது நுகரும் வேளைகளில் மட்டும் அந்த 'தான்' இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் அடிப்படையில் நுகர்வதல் என்பதே நுகர்பவனின் தன்மையைத் தீர்மானிப்பதால், நவீன நாகரிகத்தின் முடிவே நுகர்தல் தான்; அதாவது - கழிவு தான்.

ஆ: என்ன சொல்கிறீர்கள், கழிவா?

அ: ஆமாம். கழிவுதான். வேறு விதமாகச் சொல்வதென்றால், செரிமானம் ஆனபிறகு உடலிலிருந்து வெளியேற்றப்படும் மலம். ஒருவன் தன்னால் இயன்ற அளவுக்கு நுகர்கின்றான்; விதவிதமாக நுகர்கின்றான். நுகர்வோர் என அழைக்கப்படுவோரின் வாழ்க்கை லட்சியம் என்ன? நுகர்தல் தான். இந்த லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தான் அவன் போராடுகிறான்.

ஆனால் இதன் இறுதி விளைவு என்ன - கழிவு. நுகர்பொருள் நாகரீகம் என்பதே கழிவுக் கலாச்சாரம்தான். ஒரு நுகர்வோன் எவ்வளவு கழிவுகளை வெளியேற்றுகிறான் என்பதுதான் அவன் எவ்வளவு பொருட்களை நுகர்ந்தான் என்பதற்கான சிறந்த நிரூபணம்.

ஆ: சரி. அதை ஒரு உருவகம் என்று வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் கேட்க நன்றாக இல்லை. கழிவு என்ற சொல்லை அதன் நேரடியான பொருளுக்கு மேல் விரித்து அனைத்துக்கும் பொருத்த முடியுமா? இந்த உலகில் சாப்பிடுகிற பொருள் தவிர வேறு எத்தனையோ இருக்கிறதே.

அ: எது எதையெல்லாம் ஒருவன் நுகர்கிறானோ, அத்தனைக்கும் இது பொருந்தும். எல்லாவற்றுக்கும் மேலாக, தொழில்துறை உற்பத்திக்கு இது பொதுவில் பொருந்தும்.

ஆ: அது எப்படி?

அ: நவீன நகரங்களில் உற்பத்தியும், நுகர்வும், அதாவது, தொழிற் துறை இடுபொருளும் ஆலைக் கழிவும் அருகருகே வைக்கப்படுகின்றன — நவீன வீடுகளில் சமையலறையும் கழிப்பறையும் அருகருகே வைக்கப்படுவது போல.

நகரங்களின் மையத்தை விட்டு வெளியே செல்லுங்கள் - பெரிய ஆலைகள்... மிகப் பெரிய கூரைகள்... வரிசையாக உலைகள்... ஓயாது பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த ஆலைகளுக்கு வெகு அருகாமையிலேயே வெட்ட வெளியில் அவற்றின் கழிவுகள், இரும்புச் சில்லுகள், துருவல்கள், இழைகள் கொட்டிக் கிடக்கின்றன.

நகரம் உற்பத்திப் பொருளை நுகர்ந்துவிட்டது, சீரணித்துவிட்டது.

**நுகர்பொருள் நாகரீகம் என்பதே கழிவுக் கலாச்சாரம்தான். ஒரு நுகர்வோன் எவ்வளவு கழிவுகளை வெளியேற்றுகிறான் என்பதுதான், அவன் எவ்வளவு பொருட்களை நுகர்ந்தான் என்பதற்கான சிறந்த நிரூபணம்.**

மீதத்தைக் கழிவாக வெளியே தள்ளியும் விட்டது.

ஆ: பெரிய நவீன நகரத்தில் வெறும் ஆலை உற்பத்தி மட்டுமா நடக்கிறது? எடுத்துக்காட்டாக - கலாச்சாரம் மற்றும் பல இருக்கிறதே?

அ: நிச்சயமாக. கலாச்சாரம் இருக்கிறது. புத்தகக்கடைகள், செய்திப் பத்திரிக்கை விற்பனை மையங்கள், திரைப்படங்கள், டிவி செட்டுகள், ரேடியோ, புத்தகங்களின் சுருக்கமான பதிப்புகள், படங்கள் நிறைந்த ஏடுகள், பாக்கெட் புத்தகங்கள், கலைக் களஞ்சியங்கள், தொகுப்புகள், மலிவுப் பதிப்புகள், மொழி பெயர்ப்புக்கள்... இருப்பினும் இந்தக் கலாச்சாரமும் ஆலைப் பொருள்களைப் போலத்தான் நுகரப்படுகின்றது.

ஏராளமாக உட்கொள்ளப்பட்டு, சீரணிக்கப்பட்டு, வதவதவென்று கழித்தும் தள்ளப்படுகின்றது. எல்லாவற்றையும் அள்ளிக் கொள்கிற கலாச்சார நுகர்வோர் அதிலிருந்து எந்தச் சத்தையும் பெறுவதில்லை. அவற்றை விடாமல் நுகர்ந்தாலும், கலாச்சார ரீதியாகச் சொன்னால், நிரந்தரமாகச் சோகை பிடித்தவர்களாகவே இருக்கிறார்கள்.

கலாச்சார நுகர்வு எதையும் விளைவிப்பதில்லை; கலாச்சாரக் கழிவை மட்டுமே அது உற்பத்தி செய்கிறது; வேறொன்றுமில்லை.

ஆ: சரி. உற்பத்தி செய்வது, நுகர்வது... இந்த இரு நடவடிக்கைகளின் வாயிலாக மட்டுமே ஒரு மனிதன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இயலுமா?

அ: தொழில்துறை நாகரீகம் என்பதே கழிவுத்தன்மை கொண்டதுதான் என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதன் முடிவு கழிவுதான். தனது கழிவை வெளியேற்றும் ஒரு மனிதனின் நடவடிக்கையை நாம் என்னவென்று அழைக்கலாம்? தன்னை வெளிப்படுத்திக் கொள்வதாகச் சொல்லலாமா?

ஆ: இல்லை, அப்படிச் சொல்ல முடியாது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறான் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அ: சரி. அவன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறான். அதாவது மறுபடியும் நுகர்வதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறான். இங்கே ஆசுவாசம் என்பதே கழிவை வெளியேற்றும் நடவடிக்கை தான்.

இன்னொருபுறம் அதீதமாக உற்பத்தி செய்கின்ற, அதீதமாக நுகர்கின்ற மனிதனும் இருக்கிறான் — அவனுக்கு அஜீரணம் ஏற்படுகிறது. அதற்கோ நம்மிடம் பேதி மாத்திரை தயாராக இருக்கிறது — வேறு வார்த்தையில் சொன்னால் போர்.

இந்த உற்பத்தி — நுகர்வு எனும் சுழலில் அவ்வப்போது ஏற்படுகின்ற மலச்சிக்கலிலிருந்து விடுபடுவதற்கு யுத்தம் தவிர்க்க முடியாததாகவும் தடுக்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது எனத் தோன்றுகிறது.

அமைதிக் காலத்து நுகர்வோனின் பணியை யுத்த காலத்தில் சிப்பாய் மாற்றீடு செய்கிறான். சிப்பாயின் நுகர்வோ அதிதீவிரமாக இருக்கிறது; அதிவேகமானதாக, விதவிதமானதாக, பறந்ததாக இருக்கிறது. அமைதிக் காலத்தில் ஒரு ஆண்டில் நுகரப்படுவதைக் காட்டிலும் அதிகமாக, யுத்த காலத்தில் ஒரே நாளில் நுகரப்படுகிறது.

ஏராளமான பொருட்களையும், செல்வத்தையும் நுகர்ந்த பின்னும் திருப்தியடையாத சிப்பாய் மனித உயிர்களை நுகரத் தொடங்குகிறான். முதலில் எதிரிகளின் உயிரை, பிறகு தன்னுடையதை.

• குப்பண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

# அனைத்திந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கம்

## ● ஏழாவது மாநாடு ●

**க**ல்கத்தாவைப் பார்க்கும் போதெல்லாம் அந்நகரம் ஒரு நிரந்தரச் சோகத்தில் மூழ்கியிருப்பது போலவே தோன்றும். வறுமையில் புதைந்த மக்கள், கெட்டியான அழுக்குப்படலத்தில் முக்குளித்த கட்டிடங்கள் - இவற்றுக்கு மாற்றமே கிடையாதோ என்று தோன்றும்.

அதே கல்கத்தா கடந்த ஏப்ரல் 23 மாலை **'அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையம்' (அ.இ.பு.ப.மை.)** நடத்திய எழுச்சியான ஊர்வலத்தினால் அசைந்து கொடுத்தது. 'நக்சல்பரி நக்சல்பரி நக்சல்பரி லால் சலாம்' (நக்சல்பரி, நக்சல்பரி, நக்சல்பரிக்குச் செவ்வணக்கம்) - எழுபதுகளில் ஓங்கி ஒலித்த குரலை நினைபடுத்தியவாறு ஊர்வலம் சென்றது. சாலைகளின் இருமருங்கிலும் அணைப்பது போல் நின்றிருந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள், பல விதமான உழைப்பாளிகள், கேள்விகள் தொக்கிய முகங்களோடு மத்தியதர வர்க்க ஊழியர்கள் — நக்சல்பரி ஊர்வலம் நிரந்தரச் சோகங்களை, அழுக்குச் சுவர்களை, நகரத்தின் கேளிக்கை ஊர்வலங்களைத் தொட்டு உலுக்கவே செய்தது.

தோழர் அருண் சன்யமாத் அரங்கத்தில் **அ.இ.பு.ப.மை-ன் 7-வது** மாநாடு நடந்தது. மாநாட்டுக்காகத் திரண்டிருந்த புரட்சிகர அரசியல் கருத்தைத் தாங்கியவர்களும், புரட்சிக் கலைக் குழுக்களும் எழுச்சிமிக்க உணர்வை அரங்கிலும், தங்கியிருந்த கம்யூன்களிலும் நிறைத்திருந்தனர். மாநாட்டுக்காகப் பல மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த தோழர்கள் தோழர் சதானந்து, துளசி அரங்குகளில் உருவாக்கப்பட்டிருந்த கம்யூன்களில் தங்கினர். ஏப்ரல் 21 இரவு முதல் ஏப்ரல் 24 காலை வரை பாடல்கள், ஆடல்கள், விதவிதமான முழவின் அதிர்வுகள், பரிமாற்றங்கள் ஓய்வின்றி நடந்தன.

● ○ ●

**மா**நாட்டு நிகழ்ச்சிகள் தியாகிகளுக்கு வீரவணக்கத்துடன் தொடங்கின. நீண்ட காலமாக ஆங்கிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்பிலிருந்து தொடங்கி இன்று வரை உடல் தளர்ந்தாலும் அரசியல் உறுதி குன்றாத தோழர் சச்சிதானந்து (உத்திரப் பிரதேசம்) செங்கொடியையும், தோழர் வரவரராவ் அஇபுபமை கொடியையும் ஏற்றி வைக்க, பல மொழிகளிலும் ''கஷ்ட ஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்'' பாடல் இசைக்கப்பட்டது.

மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு செயலர் தோழர் வரவரராவ் தலைமையேற்றார்; வரவேற்புக் குழுவின் அமைப்பாளரான புரட்சி எழுத்தாளர் கலைஞர் அறிவு ஜீவிகள் கழகம் (RWAIA) செயலர் தோழர் துர்ஜய் சர்க்கார் வரவேற்புரை வழங்கினார்; துவக்க உரையை தோழர் அருண் மித்ரா வழங்கியபோது இன்று நாட்டு மக்களுக்கு எதிராக உள்ள பார்ப்பனீய இந்துமத வெறிப் பாசிசத்தை எதிர்க்க வேண்டிய முக்கியக் கடமை உள்ளதை எடுத்துச் சொன்னார்.

மாநாட்டின் பொதுத் தலைப்பு: ''கலாச்சார தேசீயத்துக்கு எதிரான மக்களின் திட்டம்.'' இதை ஒட்டி பிரதான கட்டுரை புரட்சி எழுத்தாளர் சங்கத்தைச் (பு.எ.ச.) (RWA, ஆந்திரம்) சேர்ந்த தோழர் சேர்ந்த தோழர் செரீஃபால் முன் வைக்கப்பட்டது. இந்துமத வெறி, அதன் ஆணிவேர், வரலாற்று ரீதியாக அதை ஆதரித்த அதனோடு சமரசப்படுத்திக் கொண்ட சக்திகள், அதனை ஊட்டி வளர்த்த சக்திகள், இசுலாமிய அடிப்படை வாதம் போன்றவற்றை கட்டுரை விவாதித்தது.

அன்றைய இரண்டாம் அமர்வு தோழர் வீராச்சாமி (மகஇக) தலைமையில் பிற்பகலில் நடந்தது. மக்கள் கலாச்சாரத்தின் முதல் எதிரியாக 'இந்துத்துவா' வளர்ந்துள்ளதைப்பற்றி எளிய சில எடுத்துக் காட்டுக்களோடு விளக்கி தொடங்கி வைத்தார் வீராச்சாமி.

தொடர்ந்து ''ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யும் கலாச்சார மீட்பு வாதம்'' என்ற தலைப்பில் கேரளத்து மக்கள் கலை இலக்கியச் சங்கம் (ஜனகலா சாகித்திய வேதி) (JKSV) தோழர் பி.கே. வேணுகோபாலன் பேசினார். புரட்சிக்காக கம்யூனிஸ்டு கட்சி செயல்படுகின்ற போது, எதிர்ப்புரட்சி உலகெங்கிலும் ஏகாதிபத்தியங்கள் செயல்படுத்தப்பட்டதையும், மதவாதம் - மீட்புவாதங்கள் எங்கெல்லாம் தொடங்கி வைக்கப்பட்டது, இட்லரின் ஜெர்மானிய இனமீட்புவாதம், லெக் வலேசா, யூகோஸ்லாவாகியாவில் இனவாதம், அஜர்பைஜான் மதஉளவு சதி வேலைகள் ஆப்கானிஸ்தானின் தாலிபான் இயக்கம், இசுரேலிய சயோனிச அதிகாரம் - இவை அனைத்தும் பிற்போக்கு அரசியல் அதிகாரத்தை நிறுவவும் நிர்வகிக்கவும் புரட்சியை எதிர்க்க மக்களை தம் பக்கம் சேர்க்கவும் என்னென்ன சதிகளைச் செய்தன என்று விரிவாகப் பேசினார். இதன் இறுதியில் 'இந்துத்துவா' பி.ஜே.பி. சக்திகளின் திட்டம் பற்றியும் அது ஏகாதிபத்திய நோக்கங்களுக்கே சேவை செய்கின்றது என்றும் அம்பலப்படுத்தினார்.

முற்போக்குப் பாடல்களை எழுதுவதிலும் இசைப்பதிலும் தேர்ந்த பாடகர் சுமன் சாட்டர்ஜி ''கலாச்சாரத் தொழில் துறை'' என்ற தலைப்பில் ஏகாதிபத்திய கலாச்சார ஊடுருவல், தாக்கம், ஆதிக்கம், இசையில் அதன் பாதிப்பு, அரசியல் - கலாச்சார உறவுகள் ஆகியவற்றை நுட்பமாக அம்பலப்படுத்திப் பேசினார்.

அமர்வின் இறுதியில் தொகுத்துரைத்த வீராச்சாமி - பார்ப்பனீய இந்துமத வெறிப் பாசிச எதிர்ப்பில் முன் நிற்க வேண்டிய கடப்பாடு பாட்டாளி வர்க்க கலாச்சாரத்துக்கான சமரில் இறங்கி உள்ள நம்மிடமே இருக்கிறது; இந்த பாசிசத்தை சித்தாந்த ரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டும், நேருக்கு நேர் தெருப் போரிலும் சந்தித்துச் சண்டை போட வேண்டும்; பாசிச



**அ.இ.பு.ப. இயக்கத்தின் புதிய செயலர் கத்தார் நடத்தும் கலைநிகழ்ச்சி.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செங்குநதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

www.padippakam.com

அபாயத்தை அடிப்படை வாதம், இந்துத்துவா, மீட்பு வாதம் என்று மட்டும் வர்ணிப்பதும் இந்துமத வெறியை பார்ப்பனீய பாசிசம் என்று பார்க்காமல் அதற்கு எதிரான அரசியல் போர்களிலும் இறங்காமல் தயங்குவதும் அதைக் குறைத்து மதிப்பிடுவதாகும். சர்வ தேச அரங்கில் பாசிசம் பல்வேறு நாடுகளில் பல்வேறு வடிவங்களை எடுக்கும் என்று தோழர் திமித்ரோவ் சொன்னதை நாம் நினைவில் வைத்துச் செயல்பட வேண்டும் என்றார்.



பீகார்த் தோழர் ராம்பாலியின் கலை நிகழ்ச்சி

இரண்டாம் நாள் காலை அமர்விற்கு பஞ்சாப் 'கிராந்திக்காரி சாகித் சபா' (கே.எஸ்.எஸ்.) செயலர் தோழர் மேகராஜ் தலைமை தாங்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களான லோர்கா பற்றி பு.எ.ச. ஆந்திரம் தோழர் சலசானி பிரசாத்தும், பிரெக்ட் பற்றி JKSV தோழர் மோகன்தாசும், தோழர் பிரேம்சந்த் பற்றி பீகார் புரட்சிகர அறிவுஜீவிகள் சங்கச் செயலர் தோழர் ராஜ்கிஷோரும், நஜ்ருல் இசுலாம் பற்றி மே. வங்க புரட்சிகர எழுத்தாளர்கள், ஓவியர்கள், அறிவு ஜீவிகள் சங்கத் தலைவர் தோழர் காகன் தாசும், பால்ராப்சன் பற்றி தில்லி அ.இ. பு.ப.மை. செயலர் தோழர் காஞ்சன் குமாரும் பேசினார்கள்; பெரும்பகுதி அவர்களைப் பற்றிய அறிமுகமாக அமைந்திருந்தன.

அரங்கத்தில் கலை நிகழ்ச்சிகள் இடையிடையே நிகழ்த்தப் பெற்றன. குறிப்பாக, பீகார், சந்தால், அஸ்ஸாம், தமிழ் நாடு ம.க.இ.க, அகில இந்திய நேபாளி கலாச்சார மன்றம் ஆகிய கலைக் குழுக்கள் எழுச்சிமிக்க உள்ளடக்கத்தை புதிய ஆட்ட வகைகளுடன், அசைவுகளுடன், இசை நாட்டியங்களுடன் கலந்து அளித்தனர். சுப் பாராவ் பாணிக்ராகியின் 'எருபன்டே கொந்தரிக்கி பயம் பயம்' (சிவப்பு என்றால் சிலருக்கு பயம் பயம்) பாடலை வங்காளி மொழி பெயர்ப்பிலும், அவரது கஷ்ட ஜீவுலம் மேமு கம்யூனிஸ்டுலம் (கஷ்ட ஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்) பாடலை பல மொழிகள் கலந்தும், தொழிலாளர் வாழ்வு பற்றிய ஒரு தமிழ்ப் பாடலோடு சேர்த்தும் ஒரு தொகுப்பு நிகழ்ச்சியாக மக்கள் கலை இலக்கியக் கழக மையக் கலைக் குழு வடிவமைத்ததும், சந்தால் குழுவின் இளம் பெண் தோழர்கள் பாட்டுப் பாடி போர் நடனமாடியதும் பார்வையாளர்களை ஈர்த்தன.

ஆந்திர ஜனநாட்டிய மண்டலித் தோழர் கத்தார் தனது 'செங்கொடி' என்ற இசைக் கருவை தியாகிகளின் நினைவாக அற்புதக் கோலமாக வழங்கினார். இது தவிர பீகார், குஜராத் தோழர்களோடு கூட்டு நிகழ்ச்சிகளையும் வழங்கினார்.

சுமார் இரண்டாயிரம் பேர் ஊர்வலத்தில் பங்கேற்றனர், ஊர்வலத்தில் முன்னே ம.க.இ.க. கலைக் குழுவினர் கல்கத்தா மக்கள் கண்டிராத தமிழகத்தின் மேளம் மற்றும் பறைகளோடு விதவிதமான ஆட்டங்களை ஊர்வல நெடுகிலும் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவு ஆடிச் சென்றதும் பீகார் தோழர்கள் குழுப் பாடல்கள் பாடி ஆடிச் சென்றதும் சாலை ஓரம் நின்றிருந்த மக்களைக் கவர்ந்தன.

தியாகிகள் திடலில் பொதுக் கூட்டத்தில் மாநாட்டின் தீர்மானங்களை விளக்கியும் இந்து மதவெறிப் பாசிசத்தை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதை விளக்கியும் தோழர்கள் வரவரராவ், மற்றும் காகன்தாஸ் பேசினர். ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் மற்றும் அனைத்து உறுப்பினர் அமைப்புக்களின் தோழர்களும் பேசினர்.

போலிச் சிவப்பு ஜோதி பாசு போலீசின் சிறப்பு மேற்பார்வையில் ஒலி பெருக்கிகள் பிடுங்கப்பட்டன. கல்கத்தாவில் இரவு ஒன்பது மணிக்கு மேல் மக்களைக் கூட்டி பேசக் கூடாது. பஞ்சாப் தோழர்களில் ஒருவர் இரண்டு சின்னஞ் சிறு புல்லாங்குழல்களை ஒரே நேரத்தில் இசைக்க மற்றொருவர் ஒரு கதைப் பாடலைத் தொடங்கி இருந்தார். அப்போது ஒலிப்பெருக்கிகள் பிடுங்கப்பட்டன; அவரது ராகத்தைப் பிடுங்கியது போல.

● ○ ●

அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு மைய (அ.இ.பு.ப.மை) மாநாட்டின் செய்தி: ''பி.ஜே.பி. அதிகாரத்தில் இருந்து கொண்டு கலாச்சார தேசியம் என்று அறிவித்திருப்பது பார்ப்பனீய இந்துமதவெறிதான்; அதற்கு எதிராக மக்கள் அணி திரள வேண்டும்.'' அ.இ.பு.ப.மை உறுப்பினர் அமைப்புக்களின் மொழிகள் வேறு வேறு தேசிய இன மொழிகள்; ஆனால் ஒரே இதய மொழி; அது புரட்சி.

''திரிதிரிகி ஒச்சிந்தி
நக்சல்பரிர மாகு மரணமே
லேதந்தி நக்சல்பரி''

''மறையாது மடியாது
நக்சல்பரி, மரணத்தை
வென்று எழும்
நக்சல்பரி''

● ○ ●




'மறையாது மடியாது நக்சல்பரி' - ம. க.இ.க. கலைநிகழ்ச்சி

படிப்பகம்